விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பன்னிரண்டு + 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை (28.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

தாயகத்தில்




லண்டனில்



# கண்ணீரில் நனைந்த தமிழர் தாயகம்

## பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி




(யாழ்ப்பாணம்)

பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் தமிழர் தாயகத்தில் மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

மிகவும் உணர்வுபூர்வமாக இடம்பெற்ற இந்த நிகழ்வால் தமிழர் தாயகமே கண்ணீரில் நனைந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். பல்கலையில் வீரமறவர்களை முழந்தாளிட்டு நினைவு கூர்ந்தனர்



(11ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் அஞ்சலிக்க முயன்ற இளஞ்செழியன் கைது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் 11

## சாட்டி துயிலும் இல்லத்தில் சீருடையினர் அடாவடி

### அஞ்சலியின்போது குழப்பம்



(11ஆம் பக்கம் பார்க்க)

## தீபங்களை காலால் தட்டிய புலனாய்வாளர்கள் இராணுவத்தினரின் தடைகளை உடைத்து தீருவிலில் கண்ணீர் மல்க அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் தடைகளை உடைத்து தீருவிலில் கண்ணீர் மல்க மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

பொதுமக்கள் ஏற்றிய தீபங்களை சிவில் உடையில் இருந்த புலனாய்வாளர்கள் காலால் தட்டி விட்டு அநாகரிகமாக நடந்து கொண்டனர்.

வல்வெட்டித்துறை தீருவில் ரேவடி கடற் 11



## ஊடகவியலாளர் மீது முள்ளிவாய்க்காலில் இராணுவம் தாக்குதல்



(பனிக்கன்குளம்)

முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் மீது நான்கு இராணுவத்தினர் 11

## நீதியரசர் விக்னேஸ்வரன் ஈகைச்சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி



(கொழும்பு)

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மாவீரர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார். 11

## மண்டபம் முகாமில் பிரபாகரனுக்கு பிறந்தநாள் கொண்டாட்டம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின்67ஆவது 11



# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**


# மாவீரர் நாள் 'நவம்பர் 27'

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் "மாவீரர் நாள் நவம்பர் - 27" என எழுதப்பட்டுள்ளது.



மாவீரர் வாரம் ஆரம்பம் முதல் வடக்கு கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் ஆகியோரின் சுற்றுக் காவல் (ரோந்து) நடவடிக்கைகளும் கண்காணிப்புக்களும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் அதிகாலை வேளை குறித்த வீதியில் மாவீரர் நாளை நினைவுகூரும் முகமாக "மாவீரர் நாள் நவம்பர் - 27" என எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-104)


## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8683)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com

## நல்லின பசுக்கள் விற்பனைக்கு

நல்லினப் பசு மாடுகள் விற்பனைக்கு உண்டு.
பண்ணை வைப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இ)

078 423 9984


## வடமராட்சி கடற்கரைகளில் இரு சடலங்கள் கரையொதுங்கின

வடமராட்சிமணற்காடு, வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதிகளில் நேற்றுச் சனிக்கிழமை (27.11.2021) இரு சடலங்கள் கரை ஒதுங்கியுள்ளன.

குறித்த இரு சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் அவற்றை அடையாளம்காணும்முயற்சியிலும் மேலதிக நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-18.60)


# IELTS

ACADEMIC & GENERAL

**DURATION: 48 HRS WEEK/WEEK ENDS**

- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட பற்பித்தல் வசதி
- IELTSS5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்

(8813)

345, Kasthuriyar Road, Jaffna. 021 435 5115, 071 415 0995


## பொதுக்கூட்டம்

### கைதடி வீட்டுத் திட்ட நம்பிக்கை சங்கம்

கைதடி வீட்டுத்திட்ட சங்க யாப்பு பிரிவு 5Aயின் பிரகாரம் சங்கத்தின் பொதுக்கூட்ட அறிவிப்பு

**திகதி** - 04.12.2021
**நேரம்** - காலை 10 மணி
**இடம்** - இல.53A,சிங்கமலைத் தோட்டம், கைதடி கிழக்கு, நாவற்குழி.

**நிகழ்ச்சி நிரல்**

1. அகவணக்கம்
2. தலைமையுரை
3. செயலாளரின் வருடாந்த அறிக்கை 2020-2021
4. கணக்கு அறிக்கை 2020-2021
5. ஏனைய முக்கிய விடயங்கள்
   A. சட்டவிரோத குடியிருப்புகள்
   B. நம்பிக்கைச் சபை உறுப்பினர்களால் தவறான முறையிற் கையாடப்பட்ட காணிகள் மற்றும் யாப்பிற்கு முரணாக வியாபார அடிப்படையில் காணிகளைக் கையாண்டமை.
   C. கடந்தகால சங்க நடவடிக்கைகளை ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான விசாரணைக் குழு அமைத்தல்,
   D. புதிய நம்பிக்கைச் சபை தெரிவு.

***குறிப்பு:-*** சங்க அங்கத்தவர் அடையாள அட்டையுடன் அல்லது சங்க அங்கத்துவத்துக்கான ஆதாரத்துடன் வருபவர்கள் மட்டுமே (அங்கத்துவ பற்றுச்சீட்டு/ காணி உறுப்பின் உறுதி) நிகழ்ச்சியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.


**க.செவ்வேள்**
**செயலாளர்**
**021 224 4489**

(C-3106)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு வேலும்மயிலும்

**(ஓய்வுநிலை அதிபர்)**



சிவன் கோவிலடி வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு வேலும் மயிலும் (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் கடந்த 25.11.2021 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் முருகுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மகாபார்வதிஅம்மாவின் பாசமிகு கணவரும் இரவீந்திரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - இலங்கை வங்கி), பாலேந்திரன் (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்ரர்), கலாவதி, கலாராணி, குகேந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்), சிவேந்திரன் (கனடா), குணேந்திரன் (லண்டன்), கலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் இடம் பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்: குடும்பத்தினர்*

(C-3105) **077 175 0128**


# STUDY IN UK

உங்கள் LONDON செல்லும் கனவை நனவாக்க இன்றே எமமுடன் இணையுங்கள்
நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி LONDON செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**



- ஆகக் கூடுதல் விசாக்களைப் பெற்றுக்கொடுத்திருப்பதால்
- 4 வருட Visa உத்தரவாதம்
- இலவச IELTS மற்றும் City & Guilds வகுப்புக்கள்
- முதல்தர வரிசையில் உள்ள 50 இற்கு மேற்பட்ட கல்லூரிகள் கல்கலைக்கழகங்களுக்கான ஆலொசனை
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவி உங்கள் Visa தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.
- உரிய ஆவணங்கள் இருப்பின் இரு மாதத்தில் பயணம்
- எம்மிடம் Visa பெற வரும் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

January/February ற்கான அனுமதிகள் தற்போது பெற்றுக்கொள்ளப்படுகின்றன

(8812)

EXPONET Overseas Consultants

345, Kasthuriyar Road, Jaffna. 021 435 5115, 071 415 0995

# யாழ்.பல்கலையில் மேலும் இரண்டு பேராசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேலும் இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகத் தரமுயர்த்துவதற்கு பல்கலைக் கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம்நேற்று துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்களில் மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நரம்பியல் சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி அஜினி அரசலிங்கம் மருத்துவப் பேராசிரியராகவும், விஞ்ஞானப் பீடத்தின் விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கணபதி கஜபதி விலங்கியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்கு பேரவை ஒப்புதல் அளித்துள்ளது. (நி-5-33)



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரன் லெப்டினனட் சங்கரின் இல்லம் அமைந்துள்ள வடமராட்சி கம்பர்மலையில் மாவீரர் நினைவு வாரத்தின் இறுதிநாளான நேற்றுச் சனிக்கிழமை ஈகச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

# அந்தமான் தீவுகளில் 'ஜவாத்' புயல் அடுத்தவாரம் இலங்கையில் கனமழை

(ஜெனீவா)

தென் அந்தமான் தீவு களில் அடுத்தவாரம் குறைந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி புயலாக மாறும் வாய்ப்புள்ளதாகவும் அவ்வாறு இது ஒரு புயலாக வலுப்பெற்றால், அதற்கு "ஜவாத்" என்று பெயரிடப்படும் எனவும் சர்வதேச வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயல் காரணமாக அடுத்த வாரம் இலங்கை மற்றும் இந்தியாவில் கனமழை பெய்யும் எனவும் அந் நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5)

# மாவீரர் தின புகைப்படம் பதிவிட்டவர் கைது

(மன்னார்)

மாவீரர் நினைவேந்தல் தொடர்பான புகைப்படம் ஒன்றை முகநூலில் பதிவிட்ட இளைஞர் ஒருவர் நேற்று சனிக்கிழமை விசேட அதிரடிப் படையினரால் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக முகநூலில் புகைப்படம் ஒன்றை பதிவிட்டதாகக் கூறியே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# நந்திக் கடலில் மலர் தூவி அஞ்சலி

(பனிக்கன்குளம்)



இராணுவத்தினருடைய கெடுபிடிக்கு மத்தியிலும் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். (நி-5-281)


# பாராளுமன்றில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கைப்பாராளுமன்றில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று நவம்பர் 27ஆம் திகதி மாவீரர்களின் தினத்தன்று மாவீரர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்துவதாக சிறீதரன் பாராளுமன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார். துட்டகைமுனு மன்னன் தாம் போரில் வெற்றிக்கொண்ட எல்லாளனுக்கு மரியாதை செலுத்தக்கூறிய இந்த நாட்டில், போரில் இறந்த மாவீரர்களின் நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். (நி-5)

# கல்லறைகளை சிதைத்தவர்களால் மக்களின் மனதை சிதைக்க முடியாது



(யாழ்ப்பாணம்)

மாவீரர் துயிலும் இல்லங்களை அரசு படைத்தரப்பின் ஊடாக சிதைத்தது நாட்டின் வரலாற்றில் வெட்கக்கேடான அரச பயங்கரவாதம் ஆகும். போரில் இறந்தவர்களைக் கூட மலின்ப்படுத்தும் இனவாதமும் வெறித்தனமும் அரசிடம் நிலைத்திருப்பது மானிடத்தன்மை அல்ல என தவிசாளர் நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் மாவீரர் தினத்தினை அனுஷ்ரிக்கும் முகமாக ஈகச்சுடர் ஏற்றிவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லறைகளைச் சிதைத்தவர்களால் எமது மக்களிடத்தில் இருந்து மாவீரர்களின் தியாகங்களை அகற்ற முடியவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)



தலைவர் பிரபாகரனின் 67 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் உலகில் தமிழர்கள் வாழும் பகுதி எங்கும் கேக் வெட்டி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## 6 நாடுகளுக்கு பயணத்தடை விதித்த இலங்கை

(கொழும்பு)

மிகவும் வீரியமான தன்மையுடன் அடையாளம் காணப்பட்டிருக்கும் "ஒமிக்ரோன்" கொவிட் வைரஸ் திரிபு உலகளாவிய அச்சுறுத்தல் நிலையை ஏற்படுத்தியுள்ள நிலையில் தென்னாபிரிக்கா, பொத்ஸ்வானா, லெசோதோ, நமீபியா, சிம்பாப்வே மற்றும் எஸ்வடினி முதலான நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு, இலங்கை வர நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டது. (நி)

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை நேற்று சனிக்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக புறக்கோட்டை மொத்த வர்த்தகச் சந்தை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதன்படி ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 17 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சந்தை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர். இதேவேளை சந்தையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வெதுப்பக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (நி-5)


## 9ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்

திதி. 28.11.2021

மண்ணில் 25.09.1928

விண்ணில் 07.12.2012

அப்பா நீங்கள் அமைத்த அருமையான கூடு இது
கூட்டை விட்டு ஏன் பறந்து போனீர்கள்
வாழ்வின் நிலையாமை புரிய வைத்துப் போய் விட்டீர்கள்
வெற்றிடம் பார்த்துப் பார்த்து வேதனையில் வாழ்கின்றோம்
ஆண்டவன் காலடியில் அமைதி யாய்த் தூங்க வணங்குகின்றோம்.

"தண்ணிழல்" 21/5, 1ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

(8807) குடும்பத்தினர்

## மணமகன் தேவை

யாழ் 1987-12 ஆம் மாதம், இந்து கௌரவ குடும்பம், கி.பா 25, உதவி வங்கி முகாமையாளருக்கு தகுந்த மண மகன் தேவை. (சி-3103)

தொடர்பு- 077 224 9523

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

OXFORD ENGLISH ACADEMY,
Ariyakulam junction, Jaffna. (8666)

TP : 077 780 3970, 074 007 1970

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் தேவை

கட்டட தொழில் நுட்ப உத்தியோகத்தர் நெல்லியடியில் இயங்கும் எமது வெல்லன் கொன்ஸ்ரக்ஸன் நிறுவனத்திற்கு தேவை. (சி-3102)

தொடர்பு - 077 4349 105, 077 6181 414, 021 2264 442

# ரி-10;வனிந்து ஹசரங்கவின் சுழலில் சிக்கியது சென்னை பிரேவ்ஸ் அணி



ரி-10 தொடரின் 18ஆவது லீக் போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியும் சென்னை பிரேவ்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை பிரேவ்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, பானுக ராஜபக்ஷ 18 ஓட்டங்களையும் தசுன் சானக 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும் ராயீஸ் மற்றும் ரஸ்ஸல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சுல்தான் அஹமட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.


இதனைத்தொடர்ந்து 58 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி, ஆறு ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், டெக்கான் க்ளேடியேட்டர்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டேவிட் வெய்ஸ் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களையும் டொம் பென்டோன் 19 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சென்னை பிரேவ்ஸ் அணியின் பந்துவீச்சில், அஞ்சலோ பெரேரா மற்றும் மார்க் டியால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் நுவான் பிரதீப் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 3 விக்கெட்டுகளை வீழ்த்திய வனிந்து ஹசரங்க தெரிவுசெய்யப்பட்டார். (4)

# இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன் அரையிறுதிக்குள் சிந்து




இந்தோனேசிய ஓபன் பட்மிண்டன் போட்டி பாலி நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக சாம்பியனான இந்திய வீராங்கனை பி.வி. சிந்து, தென் கொரியாவின் சிம் யுஜினுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் சிந்து 14-21, 21-19, 21-14 என்ற கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் இரட்டையர் போட்டி ஒன்றில், இந்தியாவின் சாத் விக்சாய் ராஜ் ராங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இணை, மலேசியா நாட்டின் கோ ஜே பெய் மற்றும் நூர் இஜ்ஜுதீன் இணையை எதிர்த்து விளையாடியது.

இதில் 21-19, 21-19 என்ற செட் கணக்கில் போராடி இந்திய இணை வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (4)

# அவுஸ்திரேலியாவின் புதிய டெஸ்ட் தலைவராக பட் கம்மின்ஸ்



ஆஷஸ் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் கிரிக்கெட் தலைவராக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸையும், உப தலைவராக ஸ்டீவ் ஸ்மித்தையும் நியமித்துள்ளது.

கடந்த வாரம் அவுஸ்திரேலிய அணியின் டெஸ்ட் தலைவர் பதவிலியிலிருந்து டிம் பெய்ன் இராஜினாமா செய்ததை அடுத்து இந்த நியமனம் வந்துள்ளது.

இதன் மூலம் 28 வயதான பட் கம்மின்ஸ் அவுஸ்திரேலிய ஆண்கள் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் 47 ஆவது தலைவராகிறார். (4)

## மரண அறிவித்தல்



## ராஜகோபால் ராஜ ஜெனோசன்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி கலையொளி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜகோபால் ராஜ ஜெனோசன் நேற்று முன்தினம் (26.11.2021) வெள்ளிக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் ராஜகோபால் - வசந்தகுமாரி தம்பதியரின் இளைய மகனும் ராஜ பிரதாப் (சுவிஸ்), ராஜ யதீசன், துஷ்யந்தி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை ரூபசௌந்தரி மற்றும் காலஞ்சென்ற மாதன் சிதம்பரம் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி கலையொளி காலயன்புலம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(C-3104)

தகவல்:
குடும்பத்தினர்


British Level 05
Leading towards Top up Degree
LIVERPOOL JOHN MOORES UNIVERSITY
HIGHER DIPLOMA IN QUANTITY SURVEYING
HIGHER DIPLOMA IN CIVIL ENGINEERING
ENTRY REQUIREMENTS
▪ G.C.E. A/L Maths/ Bio/ Technology Stream
▪ G.C.E. O/L or G.C.E. A/L in other streams + Engineering Foundation
DURATION : 02 Years
APPLY NOW FOR NEW INTAKE
Higher Diploma offered by UGC recognized British University
077 074 6553
077 744 2691
INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel : (+94) 214 777 888
Fax : (+94) 654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
EQAA
Institutionally Accredited
(European Quality Assurance Agency)
National Business Excellence
2019 | 2018 | 2017 | 2016
Gold Award Winner
Education Service Sector
(C-3091)
www.icbt.lk

# சீரற்ற காலநிலையால் யாழில் 216 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 216 குடும்பங்களைச் சேர்ந்த 758 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

தற்போதைய காலநிலை தொடர்பாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்று முன்தினம் மாலை சீரற்ற காலநிலை நிலவரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் காரைநகரில் இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் தற்காலிகமாக காரைநகரிலுள்ள வியாவில் பயிற்சி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை காரைநகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியினை யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளரும் அவரது குழுவினரும் நேரடி கள விஜயத்தினை மேற்கொண்டு சேத விபரங்கள் தொடர்பில் கள ஆய்வில் ஈடுபட்டனர். (4-5-33)

# காணிப்பயன்பாட்டு திட்டமிடல் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் தொடர்பான குழுக்கூட்டம் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் காணிக் கோரிக்கைகளுக்கான அனைத்து ஆவணங்களையும் பூரணமான முறையில் பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச காணியின் அளவு மிகக் குறைவாக காணப்படுவதால் காணிகளை வழங்கும்போது தேவை அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் வழங்கப்படுவதோடு அக்காணிகள் உரிய காலப் பகுதிக்குள் பயன்படுத்தப்படுகின்றதா? என்பதை அந்தந்தப் பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், காணித் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி. சிவஞானவதி, பிரதேச செயலர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (4-5-18-33)

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு நாளை முதல் 3 ஆம் கட்ட தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி நாளை முதல் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபார்ம் தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து ஆகக் குறைந்து மூன்று மாத இடைவெளியின் பின் இத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் அந்தந்தப் பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகளால் அறியத்தரப்படும்.

ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் மார்கழி மாதம் 4, 11 ஆம் திகதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்.மாவட்டத்தில் யாழ். போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகளிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் இத் தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்தார். (4-5-33)

# 3 ஆம் திகதிவரை மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை மழை தொடரும் எனவும் பல்கலை புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற் பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பாக காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது நல்லது. தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதனால் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

செறிவான மழை கிடைக்கும்போது இடி, மின்னல் நிகழ்வும் இணைந்தே இருக்கும் என்பதனால் இடிமின்னல் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம் என மேலும் தெரிவித்தார். (4-5)

# 4 மில்லியன் செலவில்
## 5 கிராமங்களுக்கு குடிநீர் வசதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஐந்து கிராமங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதற்கட்டமாக நனோ தொழில்நுட் பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

"செழிப்பான பார்வையில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்" எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் தெரிவில் முதற்கட்டமாக ஐந்து கிராமங்களில் தலா 4 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் இடைக்குறிச்சி, அச்செழு, அளவெட்டி, வறுத்தலைவிளான், உடுவில் ஆகிய கிராமங்களில் பாதுகாப்பான குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (4-5-30)

## கற்கை நெறிக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்களின் கலைமாணி பட்டப்படிப்பு (வெளிவாரி)-2017/ 2018 கற்கை நெறிக்கு 14.02.2020 திகதியினை இறுதித் திகதியாகக் கொண்டு கோரப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைவாக விண்ணப்பித்த மாணவர்களை இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் பொருட்டு இது தொடர்பான ஆவணங்களை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் http://www.codl.jfn.ac.lk// எனும் இணையத் தளமூடாக சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

மேற்படி இணையவழியினூடாகக் கோரப்பட்ட ஆவணங்களை 05.12.2021 இற்கு முன்னர் பதிவேற்றம் செய்யுமாறு திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-5)

# இரத்ததானம்

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை (28.11.2021) காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை மேற்படி ஆலய மண்டபத்தில் இடம்பெறும். மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)

# மணவாள திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீஞான வைரவப் பொருமாள் ஆலயத்தில் பிலவ வருஷ மணவாளக் கோலத் திருவிழா இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

அதனையடுத்து அஷ்டோத்தர (108) சங்காபிஷேகமும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி திரு வீதி உலா வருதலும் இடம் பெறும். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 350 | 500 |
| தக்காளி | 400 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 200 | 340 | 400 |
| கரட் | 320 | 320 | 400 |
| பூசணி | 60 | 50 | 80 |
| புடோல் | 280 | 180 | 240 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 130 | 160 |
| பாகற்காய் | 600 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 320 | 130 | 160 |
| பயற்றங்காய் | 350 | 280 | 400 |
| லீக்ஸ் | 300 | 320 | 400 |
| பீற்றூட் | 120 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 550 | 480 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 |
| போஞ்சி | 350 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 350 | -- | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 340 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | -- |
| முள்ளங்கி | 150 | 140 | 280 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 50 | 120 |

# திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறை நேர்முகப் பயிற்சி மையம், திருமந்திரப் பணிமன்றம், இனுவில்

# சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் சிவபதம் அடைந்தமை கண்டு தருகின்ற நினைவுப் பாமாலை



**திதி வெண்பா**

ஆண்டு பிலவத்து ஆனதாம் ஐப்பசியில்
காணக்கின் றபரத் துதிதையே- காண்பீர்
சைவப்புலவர் செல்லத் துரையவர்கள் மேலான
தெய்வப் பேறுற்ற நாள்

**அகவல்**

சைவமும் தமிழும் தழைத்தினி தோங்கத்
தெய்வ வணக்கமும் செய்தொழில் ஊக்கமும்
வாழ்நாள் முழுவதும் வழுவா தியற்றிச்
சூழ்பெரும் திசையெலாம் சுடர்விடும் புகழால்
ஆழ்கடல் சுற்றிய அவனியில் உயர்ந்த
இளவா லைப்பதி எழுச்சி பெறவே
இளஞா யிறெனவே உதித்த தோன்றல்
சுப்பிர மணியம் செல்லத் துரைதான்
தோன்றிய மண்ணும் தொழில்செய் இடமும்
உலகம் போற்றும் உன்னதம் பெறவே
யார்க்கும் இனிய பண்பின னாகி
அயலிடத் தெங்கும் அயரா உழைப்பினால்
அங்கங் கெல்லாம் அருந்தொண்டு செய்து
அறிந்தவ ரெல்லாம் அன்புடன் போற்ற
மெய்கண் டானில் மாபெரும் அதிபராய்
உய்வுண் டாக ஓயா துழைத்துக்
கல்விச் செல்வம் மாணவர்க் குதவி
இணுவைப் பதியில் பிறந்து வளர்ந்து
எல்லா வகையிலும் எழிலுற விளங்கிய
சிவகாம சுந்தரி வாழ்க்கைத் துணையாய
நாவர சனுடனே மாவிர தனையும்
மக்கட் பேறாய் மகிழ்ந்து பெற்றுத்
திருவா வடுதுறை ஆதீ னத்தின்
இருபெருங் கிளையாய் ஈழ நாட்டில்
கொழும்பு இணுவில் என்றவீ ரிடத்தில்
ஆதீனக் கிளைகள் இரண்டினை யமைத்துத்
திருமுறைப் பயிற்சி சைவ சித்தாந்தம்
இளைஞர் முதியோர் அனைவரும் அறிய
வரன்முறை யாக வந்தவர் படித்துப்
பெறவரும் பேறு பெற்றவ ராக
மாதத் திருமுறை ஞாயிறு தினங்களில்
காலை முதலா மாலை வரையில்
எட்டு மணிநேரம் முறையாய்க் கற்று
உள்ளும் புறமும் ஒருதன்மைக் காட்சி
பெற்றவ ராகிப் பெருமை பெறவே
சைவா சாரச் சீலர் இவரென
மற்றவ் ரெல்லாம் மதிக்க வைத்துச்
சைவமும் தமிழும் சரிவரப் போதித்து
அனைத்துப் பேரையும் அன்பால் அணைத்துச்
சிவத்தல யாத்திரை திருமுறை பாடிப்
பலமுறை பணியப் பலதையும் பணித்து
முற்றோ தல்கள் முறையாய்ச் செய்து
மூலன் உரைத்தவை முழுவதும் ஓதி
திருமந் திரத்தாற் சித்தமும் தெளிந்து
திருமூலர்க் கான குருபூசை செய்வித்
தன்றே யடைந்தார் அரனடி யதனில்
அன்னார் பெரும்பணி அனைவரும் அறிந்து
அவர்கள் காட்டிய அருள்வழி ஒழுகி
அவர்தம் ஆருயிர் சாந்தி பெறவே
எல்லாம் வல்ல இறையடி வணங்கித்
திருவா வடுதுறை ஆதீ னத்தின்
கிளையாய் இயங்கும் திருமுறை சித்தாந்த
வகுப்பிற் பயிலும் யாவரு மாகத்
திருமந் திரப்பணி மன்றத் தோடிணைந்து
வேண்டு கின்றோம் சாந்தி பெறவே

**ஆக்கம்:**
பண்டிதர் வ.பேரின்பநாயகம்,
திருமுறை விரிவுரையாளர்
பயிற்சி மையம்.

விரிவுரையாளர்களும் பயிலுநர்களும்,
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த/திருமுறை
நேர்முகப் பயிற்சி மையம்- இணுவில்.
திருமந்திரப் பணிமன்றம்- இணுவில்.

(8757)

# இராசிபலன்

28.11.2021
கார்த்திகை 12, ஞாயிற்றுக்கிழமை
நவமி பின்னிரவு 12.46 மணிவரை
பூரம் மாலை 6.11 மணிவரை
சுபநேரம் 9.13-10.43 மணிவரை
இராகுகாலம் 4.43-6.13 மணிவரை
சந்திராஷ்டமம்- அவிட்டம், சதயம்

வளவன்


மேஷம்

சுய்முயற்சி மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மிதுனம்

பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கடகம்

தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.


சிம்மம்

குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.


கன்னி

வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


துலாம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


விருச்சிகம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவர், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் இருந்த பணியை மீதியும் தொடருவீர்கள்.


தனுசு

வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கைகள் எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மருத்துவ செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும்.


மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, எடுத்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.


கும்பம்

நண்பர்கள் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


மீனம்

நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**உலகத்தில் மலிவானது அன்பு; வாங்குபவனுக்கும் கொடுப்பவனுக்கும் இலாபமே**

# புதிய கொவிட் வைரஸ் திரிபுக்கு 'ஓமிக்ரோன்' என பெயரிடப்பட்டது

(ஜெனிவா)

தென்னாபிரிக்காவில் அடையாளம் காணப்பட்டுள்ள மிகவும் வீரியம் பெற்ற கொவிட் வைரஸ் திரிபுக்கு "ஓமிக்ரோன் - omicron" என உலக சுகாதார ஸ்தாபனம் பெயரிட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் கடந்த 24 ஆம் திகதி முதல்முறையாகக் கண்டறியப்பட்ட புதிய வகை கொரோனா, பாட்ஸ்வானா உள்ளிட்ட அண்டை நாடுகளுக்குப் பரவியுள்ளது. 'பி.1.1.529' என்ற குறியீடு இடப்பட்டுள்ள அந்த வகைக்கொரோனா, இரு தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களையும் தொற்றியுள்ளது. அது, மிக வேகமாக பரவும் தன்மை கொண்ட டெல்டா வகை கொரோனாக்களைவிட அதிக தீவிரமாக மனிதர்களிடையே பரவும் என்று அஞ்சப்படுகிறது.

கிரேக்க எழுத்து முறைப்படி அதற்கு 'ஓமிக்ரோன்' எனவும் பெயரிட்டது.

இந்த வகையானது உலக சுகாதார நிறுவனத்தின் கவலைக்குரிய கொரோனா வகைகளில் முதன்மையானது ஆகும். (நி-5)

# பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் அவசியம்

## அவுஸ். உயர்ஸ்தானிகரிடத்தில் சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஒற்றையாட்சிக் கட்டமைப்பை வலுவாகக் கொண்ட சிங்களம் மற்றும் பௌத்தத்தினை முன்னிலைப்படுத்திய அரசியலமைப்பொன்று உருவாகும் சாத்தியம் அதிகம் காணப்படுவதாக புளொட் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலியுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தங்கள் மேலும் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் சித்தார்த்தன் தெரிவித்தார். (நி-5)

# சுதந்திரக்கட்சியின் ஆதரவு எமக்குத் தேவையில்லை

## மைத்திரி அணியை வெளியேற்ற திட்டம்

(கொழும்பு)

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு எமக்குத் தேவையில்லை. ஆட்சியை முன்னெடுப்பதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் அவசியமில்லை." என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கைகளிலேயே தங்கியுள்ளது என அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இப்படியெல்லாம் பிரச்சினை வரும் எனத் தெரிந்துதான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு வேட்புமனு வழங்க வேண்டாம் என நான் அன்றே வலியுறுத்தினேன். தற்போது அரசில் இருக்க முடியாவிட்டால் வெளியேறட்டும். அதனால் எமக்குப் பாதிப்பு இல்லை.

அரசுக்குள் இருந்து கொண்டு சிறப்புரிமைகளை அனுபவித்தபடி விமர்சனங்களை முன்வைப்பதைவிடவும், வெளியேறுவதே நல்லது" என அவர் குறிப்பிட்டார். (நி-5)

# சட்டத்தை பாடத்திட்டத்தில் இணைக்க ஆலோசனை

(கொழும்பு)

பாடசாலை பாடத்திட்டத்தில் தற்போது 6ஆம் தரம் முதல் 9 ஆம் தரம் வரை உள்ள குடியுரிமைக் கல்விப் பாடத்தை சீர்திருத்தங்களுக்குப் பிறகு சட்டம் மற்றும் குடியுரிமைக் கல்வியாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இத்தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின்படி, பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாகச் சேர்ப்பதன் மூலம், மாணவர்களிடையே சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சட்டத்துக்கு கீழ்ப்படியாமை மற்றும் தண்டனையின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட உரிமைகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல், சட்டம் இயற்றுதல் மற்றும் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் பொறிமுறை தொடர்பில் புரிதலை ஏற்படுத்துதல், ஒரு நாகரிக சமுதாயத்தில் சட்டத்தால் நிறுவப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய புரிதலை ஏற்படுத்துதல் போன்ற திறன்களை வளர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் சட்டத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் ஒரு பாடமாக உள்ளடக்குவது தொடர்பான பாராளுமன்ற உபகுழுவால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவால் ஆலோசனைக் குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

சிறுபொறி தான் பெரு நெருப்பு.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐந்தூரும் தர முடியாது என்ற துரியோதனனின் கர்வம்

அறத்தை எடுத்தியம்பி மக்களை வழிப்படுத்துவதற்காக எழுந்த நூல்களே இதிகாச புராணங்களாகும்.

தர்மம் வாழ வைக்கும். அதர்மம் அழிவைத் தரும். புண்ணியம் சொர்க்கத்தில் சேர்க்கும். பாவம் நரகத்தில் இடும் என்ற உண்மைப் பொருளை உணர்த்துவதற்காகப் படைத்தருளப்பட்ட இதிகாசங்களில் கடவுள் அவதாரங்களும் கலந்து கொண்டன.

ஆம், மகாபாரதம் எனும் இதிகாசம், கலியுகத்துக்கு முந்திய துவாபர யுகத்தில் தோன்றியது.

கலியுகம் தோன்றுவதற்கு முன்னதாக, துவாபரயுகத்தின் அந்தலையில் அருளப்பட்ட மகாபாரதம் துவாபரயுகத்து மக்களுக்கானதன்று.

மாறாக கலியுகத்தில் வாழக்கூடிய மானிட சமூகத்தை வழிப்படுத்தும் பொருட்டு, துவாபர யுகத்தின் முடிவில் அருளப்பட்டது.

எனவே மகாபாரதத்தை கலியுகத்து வாழ் மானிட சமூகம் கற்றறிய வேண்டியது கட்டாயமானதாகும்.

அந்தவகையில், கௌரவர் தலைவன் துரியோதனன் திருதராட்டிரனின் புத்திரன். அவனுடன் சகோதரர்கள் சேர்ந்து நூற்றொருவர் ஆயினர்.

பாண்டவர்கள் ஐவர். பாண்டுவின் புத்திரர்கள். தருமபிரான் பாண்டவர் அணியின் தலைவன்.

அறுவராய் இருக்க வேண்டியவர்கள் பாண்டவர்கள். விதிவசத்தால் கர்ணன் கௌரவர் தரப்பில் சேர்ந்து கொண்டான்.

அஃது குந்திதேவியார்விட்ட தவறு என்றால், அதற்கு வில்லிபுத்தூரர் உடன்பாடில்லை.

அப்படியானால், கர்ணனைப் படைத்து அவனை அங்கதேசத்துக்கு அரசனாக்க வைத்து, துரியோதனன் தரப்பில் இணைய வைத்தது எதற்கானதென்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

இங்குதான் கூடாத கூட்டம் சேர்ந்தால், அவலத்தில் வீழ்ந்து அந்தரிக்க வேண்டி வரும் என்பதும் சேராத இடம்தனிலே சேர்ந்தால் ஈகையும் உயிர்மெய் காக்க முடியாமல் கைநழுவிப் போகும் என்ற மேலான தத்துவம் உணர்த்தப்படுகிறது.

இஃது ஒருபுறமிருக்க, துரியோதனன் தலைமையிலான நூற்றொருவர் கொண்ட அணியை தருமர் தலைமையிலான பஞ்ச பாண்டவர் என்ற குறைந்த எண்ணிக்கையிலானவர்களுடன் ஒப்பிடுகின்ற தேவை எதற்கானது என அலசும்போது, எண்ணிக்கையிலும் பெரும்பான்மையிலும் எதுவும் இல்லை.

மாறாக குறைந்த எண்ணிக்கை கொண்டவர்கள் சிறுபான்மையும் அல்ல.

இன்னும் சுருங்கக்கூறின், பெரும்பான்மை என்பதற்காக சிறுபான்மையை அடக்கவும் ஆளவும் கூடாது.

ஆம், எங்கு தர்மம் உள்ளதோ; எங்கு நீதியுள்ளதோ; எங்கு தியாகம் உள்ளதோ; தெய்வீகத்தின் துணை யார் பக்கம் இருக்கிறதோ அவர்களே வெற்றி கொள்வர்.

இதனை எடுத்துரைக்கவே மகாபாரதம் எனும் இதிகாசம் தந்தருளப்பட்டது என்பதை இந்நாட்டின் ஆட்சித் தரப்பினர் அறிவது உத்தமமாம்.

# மாவீரர்களது இலட்சியத்திற்காக தொடர்ந்து பயணிக்கவேண்டும்

## நினைவேந்தல் நிகழ்வில் வேலன் சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்கள் எந்த இலட்சியத்திற்காக தமது இன்னுயிர்களை ஈந்தார்களோ அதே இலட்சியத்திற்காக தொடர்ந்தும் பயணிக்க வேண்டும் என பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை தீருவில் திடலில் நேற்று மாலை 6.05 மணியளவில் பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்கடிக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் திட்டமிட்டபடி இடம்பெற்றது.

பருத்தித்துறை நீதிமன்றின் தடை உத்தரவை பெறுவதற்கு வல்வெட்டித்துறைப் பொலிஸார் இறுதிவரை முயன்று பலனளிக்காத நிலையில், நினைவு அஞ்சலி செலுத்துவதற்கு வந்தோரை அச்சுறுத்தும் பாணியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். (ம)

# கோவிட் தொற்றால் மேலும் 20 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்றால் மேலும் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,278 ஆக அதிகரித்துள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 7 பெண்களும் 13 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## வவுனியா நொச்சிமோட்டையில்

# மின்சாரம் தாக்கியதில் முதியவர் உயிரிழப்பு

வவுனியா நொச்சிமோட்டை துவரங்குளம் பகுதியில் விலங்குகளுக்காக பொருத்தப்பட்ட மின்சார இணைப்பில் சிக்கி முதியவர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

குறித்த முதியவர் தனது வீட்டிலிருந்து நேற்று காலை 5 மணியளவில் மரவள்ளி கிழங்குகளை பிடுங்குவதற்காக அருகில் உள்ள தோட்டக்காணிக்கு சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் குறித்த முதியவர் வீட்டிற்கு வராத நிலையில் மனைவி அவரைத் தேடியுள்ளார்.

இதன்போது அவரது தோட்ட காணியில் சடலமாக கிடந்தமை அவதானிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இச்சம்பவத்தில் நொச்சிமோட்டை பகுதியை சேர்ந்த துரைச்சாமி சுப்பிரமணியம் (வயது -69) என்ற முதியவரே மரணமடைந்துள்ளார்.

குறித்த முதியவர் விலங்குகளுக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சார இணைப்பில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-299)

## கிளிநொச்சி திருவையாற்றில்

# எரிவாயு கசிவினால் சிலிண்டர் வெடிப்பு

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் சிலிண்டரில் எரிவாயு கசிவினால் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. நேற்று முற்பகல் 11.30 அளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

எரிவாயு கசிவு ஏற்பட்டால் மாத்திரமே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறலாம் என பிரதான இரண்டு சமையல் எரிவாயு நிறுவனங்களினதும் விசேட நிபுணர்கள் தெரிவித்தனர்.

எரிவாயு கலப்பு அல்லது சிலிண்டரின் தரத்தைக் குறைக்கும் செயற்பாட்டில் தமது நிறுவனம் ஒருபோதும் ஈடுபடாது என அவர்கள் உறுதிப்படுத்தினர். (ம)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021


"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்." -ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**மன்னார் பிரதேசத்தில்** கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர்வீதி, நளவன்பாடி புதுத்தெரு (பள்ளிமுனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி மைதானம் மன்னார், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர்வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (நி)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கடவுள் உன்னைத் தேடி வந்த காலத்தை நீ அறிந்து கொள்ளவில்லை"
❖ "'கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று'
❖ போர் முழக்கங்களையும் குழப்பங்களையும்பற்றிக் கேள்விப்படும்போது திகிலுறாதீர்கள். ஏனெனில், இவை முதலில் நிகழத்தான் வேண்டும். ஆனால், உடனே முடிவு வராது"
❖ நீங்கள் தலைநிமிர்ந்து நில்லுங்கள் ஏனெனில், உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது."
❖ விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும். ஆனால், என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா."
❖ "தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும், என் விருப்பப்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்"

# 1371 விவசாய குடும்பங்களுக்கு விதை தானியம் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

நாட்டைக்கட்டி எழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைத்திட்டமிடலுக்கு அமைய இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரனின் வழிகாட்டலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உழுந்து, பயறு செய்கைக்கான விதை தானியங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட 1371 பயனாளிகளுக்கு விதை தானியங்களை வழங்கினார்.

இதன்போது அராசாங்க அதிபர் க.விமலநாதன் கருத்துத் தெரிவிக்கையில், இரண்டு பயிரினங்களும் மாவட்டத்தில் 727.85 ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதை தானிய கொள்வனவிற்காக இரண்டு கட்டங்களாக நிதி கிடைத்துள்ளது.

7.5 மில்லியன் ரூபாய் நிதியில் இந்த விவசாயிகளுக்கான விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் கலாநிதி அமல் ஹர்ச டி சில்வா, மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.(4-5-281)

# உடைப்பெடுத்தது கருவேலன் குளம்

## பாதிக்கப்பட்டது விவசாய செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு கருவேலன் கண்டல் குளத்தின் வான் பகுதி உடைப்பெடுத்ததனால் குளத்தில் இருந்து பெருமளவு நீர் வெளியேறி வருகிறது. நேற்று முன்தினம் குளத்தின் வான் பகுதியில் உடைப்பெடுத்ததனால் குளத்தில் இருந்து பெருமளவு நீர் வெளியேறி வருகிறது.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள இக்குளம் உடைப்பெடுத்ததன் காரணமாக இக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன. (4-5-350)

# மூன்று கடைகளுக்கு ரூ.46 ஆயிரம் அபராதம்

(தருமபுரம்)

கரைச்சி சுகாதாரப்பிரிவின் கீழ் உள்ள கிளிநொச்சி நகரப்பகுதியில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காத 3 தேநீர் கடை உரிமையாளர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவ ட்டநீதிமன்றினால் ஒரு கடை உரிமையாளருக்கு 30,000 ரூபாவும் மற்றைய இருவருக்கும் ,16,000 ரூபாயும் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் அவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (5-4-316)

# பேருந்து சேவைகள் இன்மையால் நெருக்கடிக்குள்ளாகும் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் சில கிராம மக்கள் முல்லைத்தீவிற்கும் வவுனியாவுக்கும் பயணிப்பதற்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

100 குடும்பங்கள் வாழ்கின்ற இத்திமடுக் கிராமம், 110 குடும்பங்கள் வாழ்கின்ற தண்டுவான் கிராமம், 374 குடும்பங்கள் வாழ்கின்ற பழம்பாசி கிராமங்களின் மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை எனவும் முல்லைத்தீவில் இருந்து பயணிக்கும் பேருந்துகள் ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வழியாக வவுனியாவுக்கு பயணிப்பதாகவும் நெடுங்கேணியில் இருந்து பழம்பாசி, தண்டுவான், இத்திமடு வழியாக முல்லைத்தீவிற்கும் வவுனியாவுக்கும் இடையில் பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பேருந்து சேவைகள் இதுவரை இடம் பெறவில்லை எனவும் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (4-5-350)

## வாய்க்கால் சீரின்மை

# கிராமத்திற்குள் தேங்கிய வெள்ளம் 30 குடும்பங்கள் பாதிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இத்தாவில் கிராமத்தில் சீரான முறையில் கால்வாய் இல்லாததால் வெள்ள நீர் வெளியேற இடம் இல்லாமல் கிராமங்களுக்குள்ளேயே தங்கியுள்ளது.

இதனால் 30இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. குறித்த கிராம த்தில் சீரான வடிகால் வாயக்கால் அமைப்பு ஒன்று தேவை என கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க நேற்று இத்தாவில் கிராமத்திற்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கிளிநொச்சிமாவட்ட அமைப்பாளர், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர். குறித்த கிராமத்தில் மக்க ளின் கோரிக்கைக்கு இணங்க தற்காலிக வாய்க்கால் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டது. (4-5-316)

# வீதியை மேவிப்பாயும் வெள்ளம் போக்குவரத்தில் பெரும் சிரமம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாமூலை கிராமத்தில் வீதி ஒன்றை மேவிப் பாயும் வெள்ளம் பாய்வ தன் காரணமாக போக்குவ ரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் மக்களினாலும் பொது அமைப்புகளினாலும் குறித்த வீதியினை உயர்த்துங்கள்.

மதகுகள் அமையுங்கள். இப்பகுதி நீரோட்டம் மிகுந்த பகுதி என தெரிவிக்கப்பட்ட போதிலும் வீதி வேலைகளில் ஈடுபட்டவர்கள் குறித்த விடயங்களில் கவனம் செலுத்ததன் காரணமாக வீதியினை மேவி தற்போது வெள்ளம் பாய்ந்து வருகிறது. முல்லைத்தீவு மாவட்டச்செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகங்களில் நடை பெற்ற கூட்டங்களில் இவ்விட யம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-350)

# ஆலய வழிபாட்டிற்கு இராணுவம் இடையூறு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூழாமுறிப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு சென்ற மக்களை வழிபாடுகள் மேற்கொள்ளவிடாமல் இராணுவத்தினர் தடுத்ததால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

கூழாமுறிப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆயத்தமான போது அங்கு சென்ற இராணுவத்தினர் பூசைகளை செய்ய முடியாது எனவும் வேறு ஒரு நாளில் பூசை செய்யுமாறும் கூறியுள்ளனர். இதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

இந்நிலையில் மக்களின் அழைப்பின் பெயரில் சம்பவ இடத்திற்கு விரைந்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இ.சந்திரறூபன் பூசை வழிபாடு செய்ய தடைவிதித்த இராணுவத்தினரிடம் நீங்கள் கூறுவது போன்று பூசை வழிபாடுகளை மாற்ற முடியாது எனவும் அவ்வாறு பூசை செய்யக் கூடாது எனில் நீதிமன்ற தடை உத்தரவினை காண்பியுங்கள் என கோரியதோடு இது தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் கூறி சம்பவ இடத்துக்கு அழைத்தார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் மக்களை வழிபாட்டிற்கு அனுமதித்தனர். அதன் பின்னர் ஆலய முன்றலில் நின்ற பாதுகாப்புத் தரப்பினர் விலகிச் சென்றனர். குறித்த சம்பவம் காரணமாக சுமார் ஒன்றரை மணித்தியாலங்களின் பின்னரே பூசை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-281)

# வர்த்தக நிலையங்களை திறக்குமாறு இராணுவம் அச்சுறுத்தல்

(பனிக்கன்குளம்)

மாவீரர் நாளான நேற்று உயிர்நீத்த தமது உற்றார், உறவினர் நண்பர்களை நினைவில் கொண்டு தமிழர் பகுதிகளில் நினைவேந்தல் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று காலை முதல் முல்லைத்தீவு நகர வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு இராணுவத்தினர் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் வர்த்தக நிலைய பெயர்ப் பலகையில் காணப்படும் வர்த்தக நிலைய உரிமையாளர்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சில வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். (5-4-281)

## மண்டபம்...

பிறந்தநாளையொட்டி மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள மக்கள் நேற்று முன்தினம் கேக் வெட்டி கொண்டாடினர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கை தமிழ் மக்கள் ஆண்டுதோறும் கொண்டாடுவது வழக்கம்.

அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளை மண்டபம் முகாமில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கேக் வெட்டி கொண்டாடினர். (ம)

## அஞ்சலிக்க...

மாவீரர் நினைவேந்தலை முன்னெடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் அரசியல் செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தமது வீட்டில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்காக இளஞ்செழியனும் மனைவியும் ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை அங்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள் இளஞ்செழியனை இழுத்துச் சென்று வாகனத்தில்ஏற்றிச்சென்றனர். (ம-18)

## ஈகைச்சுடரே...

நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் நேற்று சனிக்கிழமை மாவீரர் தினத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1172
வெற்றி இலக்கங்கள்
மீனம் 1 4 4 6 8 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0947
வெற்றி இலக்கங்கள்
M 26 07 39 52 61

மஹஜன சம்பத
திகதி 2021/11/27
சீட்டிழுப்பு இலக்கம் 4599
T 0 1 5 4 0 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2894
வெற்றி இலக்கங்கள்
D 21 43 51 78
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.11.27
சீட்டிழுப்பு இலக்கம் - 629
L 25 32 62 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


வடக்கு, கிழக்கில் பொலிஸார் நீதிமன்றங்கள் ஊடாக தடைகோரியிருந்த நிலையிலும் மாவீரர்களுக்கான நினைவேந்தல்பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. (ம-18)

## முள்ளிவாய்க்கா...

இணைந்து மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வசந்திரன் மீதே மூர்க்கத்தனமாக இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் ஊடகவியலாளர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் பெயர் பலகையை புகைப்படம் எடுத்த ஊடகவியலாளரை ஏன் எடுக்கின்றாய் எனக் கேட்டே நான்கு இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் பரிசோதகரிடமும் 59 ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியிடமும் சம்பவம் தொடர்பான அறிக்கை கோரப்பட்டன. மேலும் காயமடைந்த ஊடகவியலாளரிடமும் வாக்குமூலம் பெறுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ்./ வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். (ம-18,33,281)

## வீரமறவர்களை...

யாழ். பல்கலையில் மாவீரர்களுக்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் மரபுரீதியாக நேற்று 6.05 மணிக்கு ஈகைச்சுடர், யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் தூபியில் ஏற்றப்பட்டது.

அத்துடன் உயிரிழந்த வீர மறவர்களுக்கு முழந்தாளிட்டு மாணவர்கள் அஞ்சலியும் செலுத்தினர்.

பல்கலைக்கழக சூழலில் இராணுவமும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு வழமையை விட கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகமாக இருக்கின்ற நிலையில் மாணவர்கள் தமது ஆத்மார்த்தமான கடமையை நிறைவேற்றினர். (ம-18,33,104)

## சாட்டி துயிலும்...

சாட்டி துயிலும் இல்லத்தில் இராணுவம், பொலிஸாரின் தடங்கலுக்கு மத்தியில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

பொது மக்கள் அஞ்சலி செலுத்தும் போது இராணுவம் மற்றும் பொலிஸார் தடங்கல் ஏற்படுத்தினர்.

இதனால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சாட்டி துயிலுமில்லப் பகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சுகாஷ் தலைமையிலான அணியினர் மாவீரர் நாளிற்கு தீபம் ஏற்றுவதற்கு முயன்றபோது அங்கு இராணுவம், பொலிஸாரால் தடைவிதிக்கப்பட்டதால் குழப்பநிலை ஏற்பட்டது. (ம -18,33)

## கண்ணீரில்...

தமிழீழத் தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்கள் நேற்று தமிழர் தாயகத்திலும் தமிழர்கள் வாழும் தேசங்களிலும் மிகவும் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டனர்.

இராணுவம் மற்றும் பொலிஸ் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமிழர் தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களிலும் வீடுகளிலும் மாவீரர்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது.

நேற்று மாலை 6.05 மணியளவில் மணியொலி எழுப்பப்பட்டதையடுத்து, அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதையடுத்து, 6.07 மணியளவில் தமிழர் தாயகப் பகுதிகளிலும் தமிழர்கள் வாழும் தேசங்களிலும் ஒரே நேரத்தில் நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டன.

தமிழர் தாயகத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று மாவீரர் நாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

கிளிநொச்சி கனகபுரம், முழங்காவில் துயிலுமில்லங்களிலும், மன்னாரில் பெரியபண்டிவிரிச்சான், ஆட்காட்டிவெளி துயிலுமில்லங்களிலும், யாழ்ப்பாணத்தில் சாட்டி துயிலும் இல்லம், தீருவில் திடலிலும் முல்லைத்தீவில் வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்திலும் மாவீரர் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

கனகபுரம் துயிலுமில்லத்தில் பொதுமக்கள், மாவீரர்களின் பெற்றோர் உணர்வுடன் ஒன்றுகூடி சுடர்களை ஏற்றினர்.

மட்டக்களப்பில் மாவீரர்கள் நினைவாக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருகோணமலை பொதுமக்கள் நினைவுச் சுடர்களை ஏற்றி நினைவேந்தல் நடத்தினர். மேலும் புலம்பெயர் தேசங்களிலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. (ம)

## இராணுவத்தி...

கரைப் பகுதியில் பொதுமக்கள் ஒன்று குவிந்து மாவீரர்களுக்கும் இறந்த பொதுமக்களுக்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஆயிரக்கணக்கில் ஒன்று குவிந்த மக்கள், கண்ணீருடன் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் தடை உத்தரவை பெறுவதற்கு வல்வெட்டித்துறை பொலிஸார் இறுதிவரை முயன்று பலனளிக்காத நிலையில், நினைவு அஞ்சலி செலுத்துவதற்கு வந்தோரை அச்சுறுத்தும் பாணியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

பல்வேறு அச்சுறுத்தல் தடைகளையும் தாண்டி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே திடலுக்குள் இராணுவத்தால் உள்நுழைய அனுமதிக்கப்பட்ட உறவுகள் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்ததுடன் பொதுச் சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது உறவுகளை இழந்தவர்கள், மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இதனைக்கண்டு அஞ்சலி செய்ய தீருவில் திடலுக்கு வெளியே ஒன்று கூடி தீபங்களை ஏற்றி பொதுமக்கள் அஞ்சலித்தபொழுது சிவில் உடையில் இருந்த புலனாய்வுப் பிரிவினர் தீபங்களை தட்டிவிட்டதுடன் அநாகரிகமான முறையில் செயற்பட்டனர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றியவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டதுடன் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டனர்.

இதேவேளை, பொதுமக்களை திடலுக்குள் அனுமதிக்காததால் வெளியில் நின்றும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ம-18,33,60)

## கோவிட் - 718

(கொழும்பு)

நாட்டில் மேலும் 718 கொரோனா தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 561,777 ஆக அதிகரித்துள்ளது. (ம)


அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1402
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 27.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,326,140
வெற்றி இலக்கங்கள்
09 35 72 77 U

சனிதா
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3737
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 27.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,653,940
வெற்றி இலக்கங்கள்
46 50 60 61 T

SUPER BALL
Draw Number சீட்டிழுப்பு வாரம் 1576
Colour நிறம் நீலம்
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 27
Week Days Name தினம் சனி
X 20 25 60 62
Next jackpot அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூபா 72,025,663/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 105
சீட்டிழுப்பு திகதி 27.11.2021 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 37 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,209,360/-

சங்வர்தன வாசனாவ
திகதி : 2021-11-27
வெற்றி வாரம் : 463 | வர்ணம் : சிவப்பு
ரூ. 11,100,488/-
Z 20 25 49 6
ரூ. 2,134,120/-
ரூ. 11,206,968/-

ரூசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,365,836/-
Draw Date திகதி 2021 / 11 / 27
Draw Number வெற்றி வாரம் 3288
Colour வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 11 18 19 20
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,703,520/-

# சிறீதரன் எம்.பி மாவீரர்களுக்கு அஞ்சலி



(கொழும்பு)

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காய் போரிட்டு உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் முகமாக நேற்றைய தினம் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ் மக்கள் மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கொழும்பில் வைத்து மாவீரர்களுக்கு தனது அஞ்சலிகளை செலுத்தியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத்திலும் அவர் மாவீரர் தினத்தைநினைவூட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3014)

0768226240 DHL

## வேலை வாய்ப்பு

ஊடக நிறுவனத்தில் வேலைவாய்ப்பு:

- செய்தி வாசிப்பாளர்
- வீடியோ எடிட்டிங்

(8816)

076 126 6682

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக்கட்டுவன் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500M தூரம்)

(1 பரப்பின் விலை எட்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் )

(8811)

தொடர்பு

076 890 9259, 077 015 0353

## கனடாவில்

வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS / DIPLOMA / DEGREE ஆங்கில அறிவு



அனைத்து துறைகளிலும் அனுபவம், அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.

0777-068-777

(C-3089)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்களும் தங்கிநின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்களும் தேவை.

(8809)

077 419 5015

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் குரு ஹாட்வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- ஹாட்வெயார் அனுபவம் உள்ளவர்கள்/ பழக விருப்பம் உள்ளவர்கள் தேவை.
- சீமெந்து விற்பனைப் பிரதிநிதிகள் - ஆண்கள்
- துப்புரவு (கிளீனர்ஸ்) வேலையாட்கள் - பெண்கள்

தகுதியுடையோர் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும். சம்பளம் கவர்ச்சிகரமாக வழங்கப்படும். கிழமை நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை. நேரில் சமுகம் தரவும்.

(C-3081)

077 743 5265

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம். 1991, திருவோணம், உயரம் 5'10" விஞ்ஞானப் பட்டதாரி சிவில் எஞ்சினியர் (பேராதெனிய) மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. படித்த பெண் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.

(இ)

074 155 1935

## A/L 2023 தமிழ்

பிரிவு - III

பா.பத்மநாதன்

B.A (Hons) (Tamil spl.) - 1st Class, M.A (Tamil) - 1st Class, M.Ed (Hons) - 1st Class, Dip in Ed.

ஆரம்பம்: 04.12.2021

C.C.A - சுன்னாகம் (10 A.M - 11 A.M)


மொடேண் - சண்டிலிப்பாய் (3 P.M - 4 P.M)

சித்திவிநாயகர் - மல்லாகம் 2 P.M - 3 P.M

மகுடம் - உரும்பிராய் (11 A.M - 12 A.M)

(8745)



## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
07
-
09
-
1970

விண்ணில்
29
-
10
-
2021

### அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் (சீலன்)




உயிரே... உறவே
சீலனே என்னுயிரே உன்னைக்
காணாது தவிக்கின்றேன் ஒருமுறை
அழைக்காயோ "லலி அம்மா" என
ஆருயிர் அப்பாவே
எப்படி எங்களிடமிருந்து உங்களைப்
பறிக்க இறைவன் எண்ணினார்
அம்மா துடிப்பது புரிகிறதா?
டிஜான் டிவின் "அப்பா அப்பா" என
கலங்கித் தேடுவது தெரிகிறதா?
இறைவா அப்பாவைப் பிரித்து
ஏன் இந்தக் கோலம் தந்தாய்
அப்பா நீங்கள் எங்களைப் பார்த்துக்
கொண்டு இருக்கிறீர்கள் படமாய்
எங்கள் இதயத்தில் உயிராய்...

(8814)

"சீலன் அகம்" இல.12, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 453 1856

பிரிவால் துடிக்கும்
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் (சீலன்)


மண்ணில்:07.09.1970
விண்ணில்: 29.10.2021

எல்லோருக்கும் எப்போதும் இனியவனே
நல்லாருக்கு உதாரணம் நீ தானே
பொல்லா உலகில் எமைவிட்டு
இல்லாமல் ஏன் போனாய்
அத்தான் சீலா

பிரிவால் துயருறும்
சித்தப்பா குடும்பத்தினர்
மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(8805)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் (சீலன்)

உத்தம சீலனே!
என் ரத்தத்தின் ரத்தமே!
கடைக்குட்டிச் சிங்கமே!
என் உயிர் தம்பியே! தங்கமே!
என் உடன் பிறப்பே!
நானும் நீயும் ஈருடல் ஓர் உயிரடா!
உன் உயிர் என் உடலில்
ஊசலாடுதடா! உன் இதயம் துடிக்க
மறந்ததை எம் இதயம்
நம்பாது படபடக்குதடா!
நின் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்.

அன்புள்ள ஆருயிர் அண்ணன்
அன்ரன், யசோ,
பிள்ளைகள், மருமகன்
இல.74/3, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(8815)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 320

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 28.11.2021 தொலைபேசி : 021 222 3378



## தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே!





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். மானிப்பாய் சுந்தர்சன் உரிமையாளர் சுந்தரம் சிவகுமாரன் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்.

வர்த்தகத்துறையில் தர்மத்தோடு செயற்பட்ட நல்ல மனிதர். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் பின்னிற்காதவர். அவரின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் மூத்த பத்திரிகை ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் அவர்கள் காலமாகிவிட்டார். அவரின் இழப்பு பத்திரிகைத் துறைக்குப் பேரிழப்பாகும்.

இருவருக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

மாவீரர்களை நினைவேந்துவதற்குத் தடைவிதிக்கக்கோரி பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்களை அநேகமான நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளதுடன் நினைவேந்துகின்ற உரிமையைத் தடுக்க முடியாது என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாத்தியார்: உண்மைதான். இனி இந்த நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற மிகப்பெரிய பொறுப்பு நீதிபரிபாலனத்திடம் தான் இருக்கிறது.

கங்காணி: வாத்தி யார் நீங்கள் சொன்ன விடயம் நூறுவீதம் உண்மை. ஆனால்...

இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் தான் சொல்ல வந்ததைச் சொல்லாமல் தவிர்க்க, இடையில் குறுக்கிட்ட மூப்பர் இஞ்சே கங்காணியார் சொல்ல வந்ததைச் சொல்லுறதுதான் மனிசருக்கு அழகு என்றார்.

கங்காணி: இல்ல... எங்கட நீதிபரிபாலனம் எல்லாம் தங்கள் அளவில் தீர்மானித்து நினைவேந்துவது அடிப்படை மனித உரிமை என்று ஒட்டுமொத்தமாகக் கூறியிருந்தால், அடுத்த மாவீரர் தினத்தில பொலிஸார் நீதிமன்றம் ஏறி நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டும் எண்டு கேட்டு நேரத்தை வீணடிக்காமல் இருப்பினம்.



## தமிழ் மக்களின் உரிமையை காப்பாற்றுகின்ற கடமை...

சிறாப்பர்: கங்காணி யார் நீங்கள் சொல்லுறது சரியெண்டாலும் நினைவேந்துவதைத் தடுக்கமுடியாது என்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பொலிஸாருக்கு நல்லதொரு பாடம். இனி மேலாவது இனச்சார்போட பொலிஸார் நடந்து கொள்ளக் கூடாது.

காவல்துறை என்பது முழு நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் பொதுவானது. இனம், மதம், மொழி என்ற பேதம் கடந்து அனைவரும் சட்டத்தின்முன் சமம் என்ற உயர்நீதியை அமுல்படுத்த வேண்டியவர்கள். ஆனால் எங்கட நாட்டில பொலிஸார் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவதைத் தமது பிரதான கடமையாகக் கொண்டிருக்கினம்.

சாத்திரியார்: ஓ! 1974 இல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது, துப்பாக்கியால் சுட்டு மின்கம்பிகளை அறுத்து பரிநாசம் செய்தது பொலிஸார் தானே.

இதுமட்டுமோ தமிழ் மக்களுக்கு எதிராகக் காலத்திற்குக் காலம் அரங்கேற்றப்படும் இனக் கலவரங்களைத் தூண்டிவிடுவதிலும் தமிழ்மக்கள் கொல்லப்படும் போது வேடிக்கை பார்ப்பதையும் பொலிஸார் செய்தனர் என்ற உண்மைகளைத் தமிழ்மக்கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டினம்.

விதானையார்: அதால தானே பொலிஸ் அதிகாரம் எங்களிட்ட இருக்கவேணும் எண்டு தமிழ் மக்கள் கேட்கினம்.

வாத்தியார்: ஆரிட்ட அதிகாரம் இருந்தாலும் எங்கட அதிகாரிகள் மற்றும் நீதிபரிபாலனங்கள் எங்கட உரிமையை நிலை நிறுத்தவேணும் எண்டு நினைத்தால், அதனைத் தடுக்கவும் வெல்லவும் முடியாது.

ஆகையால எங்கட அதிகாரிகள், நீதித்துறைப் பேராளர்கள் ஏதோ வொரு வகையில் தமக்குள் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு எங்கள் இனத்தின் உரி மையை நிலை நாட்ட வேணும்.

இப்படிச் சொல்லுறதுக்காக சட்டத்தை மீறவேண்டும் என்றோ, நீதிக்கு மாறாக நடக்கவேணும் என்றோ யாரும் கருதி விடக்கூடாது.

விதானையார்: நான் நினைத்ததை வாத்தியார் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில தமிழ் அரசியல் வாதிகளும் தமிழினத்தின் பேரால் ஒற்றுமைப்படவேணும்.

இவ்வாறு ஒற்றுமைப்படவேணும் எண்டு கூறுவது, அரசியல் கொள்கைகளைக் கைவிடவேணும் எண்டு பொருள் தராது.

மாறாக, அரசாங்கத்தோட சேர்ந்திருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களோட தமிழ் அரசியல் தரப்புகள் ஒரு புரிந்துணர்வுடன் கலந்துரையாடி; தமிழ் மக்களுக்காக வேலைவாய்ப்புத் திட்டங்களை, தொழிற்றுறைகளைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேணும்.

அந்த வேலைத்திட்டத்தை அரச சார்புடைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு செய்விக்கின்ற காரியம் ஒருபுறம் நடக்க,

மறுபுறத்தில எங்கட அரசியல் உரிமைக்கான முன்னெடுப்புகளையும் நகர்த்திச் செல்லவேணும்.

இப்படிச் சமாந்தரப் பாதைகளினூடாக நாங்கள் பயணித்தால்தான் சம நேரத்தில சகலதிலும் நாங்கள் வெற்றியடைய முடியும்.

இவ்வாறு விதானையார் விசுவலிங்கம் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஆறு உயிர்களைப் பலி கொண்ட ஆறு

கிண்ணியா பிரதேசமெங்கும் பலத்த அதிர்ச்சியும், சோகமும் நிறைந்த செய்தியுடன் கடந்த செவ்வாய்க் கிழமை காலைப் பொழுது புலர்ந்தது. மக்கள் முதலில் அச்செய்தியை நம்பவில்லை. வெறும் வதந்தியாக அச்செய்தி இருக்கக் கூடாதா? என்று பலர் ஏங்கினர். ஆனாலும் அச்செய்தி உண்மைதான் என்பது பின்னர் தெரிந்து விட்டது.

படகு விபத்து நடந்த ஆற்றுப் பகுதியை நோக்கி மக்கள் உடனடியாகவே விரைந்தோடினர். படகில் சென்றவர்களின் குடும்பத்தினர் அலறியடித் தப்படி சம்பவ இடத்துக்கு ஓடோடிச் சென்றனர். எது நடக்கக் கூடாதென்று அனைவரும் நினைத்தனரோ, அது நடந்தே விட்டது.

குறிஞ்சாக்கேணி ஆறு இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு பேரை அநீதியாகப் பலி கொண்டு விட்டது. கிண்ணியா பிரதேசத்தை துயரம் சூழ்ந்து கொண்டது. அங்கு சோகம் இன்னும் தணியவில்லை. அழுகைக் குரல்களையே எங்கும் கேட்க முடிகின்றது.

இவ்வாறானதொரு அனர்த்தம் இடம்பெறுவதற்கு எங்கோவொரு இடத்தில் நிலவுகின்ற அலட்சியமே முதற் காரணமாக இருக்க வேண்டும்.

இதுவே பலரது உள்ளத்திலும் எழுகின்ற வினாவாக உள்ளது.


திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாக்கேணி பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படகுப் பாதை உடைந்து போகும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் அங்கு நிலவிய குறைபாடு என்னவென்பதை கவனிக்கவில்லையென்பதே மக்களுடைய பொதுவான குற்றச்சாட்டு.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்தப் பாலம் நல்லாட்சி அரசாங்கத்தினால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டது. சுமார் 750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் பாலம் 175 மீற்றர் தூரத்தைக் கொண்டது எனவும் தெரிய வருகின்றது.

இந்தப் பாதையில் மக்கள் பயணிப்பதற்காக படகுப் பாதையை கிண்ணியா நகரசபை, கிண்ணியா பிரதேச சபை மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் ஆகியன இணைந்து அனுமதி வழங்கியிருந்தன. இந்த அனுமதியானது உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே வழங்கப்பட்டதாக அப்பகுதியில் உள்ள மக்கள் குறை கூறுகின்றனர்.

ஒருபுறம் ஆற்றில் மீட்புப் பணிகள் நடந்து கொண்டிருந்தன. கிண்ணியா வைத்தியசாலையில் வரிசையில் இருந்த ஆறு பேரினதும் உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. உடல்கள் அனைத்தும் வெள்ளைத் துணியினால் மூடப்பட்டிருந்தன. உயிரிழந்தவர்களின் உறவினர்களும் பிரதேச மக்களும் அழுது கண்ணீர் வடித்த வண்ணம் இரு கைகளையும் ஏந்திய வண்ணம் காணப்பட்டனர். எங்கும் அழுகைச் சத்தங்களே கேட்டதை அவதானிக்க முடிந்தது.

> “வெறும் படகுகளை வைத்து பலகை பரப்பி படகுப்பாதை தயார் செய்தவர்கள் யார்? அதற்று அனுமதி அளித்தவர்கள் யார்? ஆபத்தான பாதை எனத் தெரிந்தும் அங்கு அனர்த்த முன்னாயத்தங்கள் செய்யாமல் அசண்டையீனம் செய்தவர்கள் யார்?”



படகு கவிழ்ந்ததில் பலியான 6 பேரின் உடல்கள் வரிசையில் கிடத்தப்பட்டிருக்க மற்றும் ஒரு பக்கத்தில் சிலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதையும், வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்கள் அவசர சிகிச்சை வழங்குவதில் அக்கறை காட்டி வந்ததையும் பார்க்க முடிந்தது.

ஒரு பக்கம் பலருக்கும் ஒட்சிசன் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. மறு பக்கம் அம்புலன்ஸ் தயாராக நின்றது. இருவரை மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக்கொண்டு சென்றனர். அனைத்து வைத்தியசாலை ஊழியர்களும் தமது கடமையை பொறுப்பாகச் செய்ததை அங்கே பார்க்க முடிந்தது.

படகில் இருந்து ஆற்றுக்குள் மூழ்கியவர்களைத் தேடும் பணியில் கிராம இளைஞர்களும் முப்படையினரும் சுழியோடிகளும் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்கள் உட்பட பலரையும் ஏற்றிச் சென்ற அந்த படகை (படகுப் பாதை) பார்த்த போது மூன்று தோணிகள் பொருத்தப்பட்டு மேலால் பலகைகள் போடப்பட்டு பார்ப்பதற்கு பயங்கரமாக தென்பட்டது.

இக்கரையான கிண்ணியாவில் இருந்து அக்கறையான குறிஞ்சாக்கேணிக்கு செல்லும் இந்த படகின் பயணத்துக்கு அனுமதி கொடுத்தது யார்? என்பதை தேடிப் பார்க்க வேண்டியது அவசியம்.

ஆற்றைக்கடக்கும் போது பாதுகாப்பு இல்லாதிருந்ததை உணர முடிந்தது. அதுமட்டுமல்லாமல் மாணவர்களும் பயணிக்கும் இந்தப் படகுப் பாதையின் ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகள் கவனமின்றிச் செயற்பட்டது முக்கிய காரணம் என்பதும் புரிந்தது.

எது எப்படி இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியம்.

ஆனாலும் சிலர் கிண்ணியாவில் மிக முக்கியமான இடங்களை மறித்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு டயர்களை எரித்து தமக்கு நியாயத்தை பெற்றுத் தருமாறு கோரினர். கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான செய்திகளைத் திரட்டச் சென்ற ஊடகவியலாளர்களின் கையடக்கத் தொலைபேசிகளைப் பறித்து அதில் பதிவு செய்யப்பட்ட படங்கள் மற்றும் வீடியோக்களை அழித்த விரும்பத்தகாத சம்பவங்கள் அங்கு இடம்பெற்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தது. அவர்கள் அவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை மிகவும் கவலையைத் தருகின்றது..

அரசாங்கத்தினால் பாலம் அமைக்க 750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மந்தகதியில் இடம்பெற்று வருவதைக் கண்டித்து ஏற்கனவே ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருந்தது.

இதேநேரம் கிண்ணியா தள வைத்தியசாலையிலும் ஒருவித பரபரப்பும் பதற்றமும் நிலவிக் கொண்டிருந்தது. அதன் காரணமாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டி கிண்ணியா பொலிஸ் நிலையத்திற்கு மிக விரைவாக எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்புக் கருதி நிறுத்தி வைக்கப்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

அதேசமயம் கிண்ணியா பிரசேதமெங்கும் பெரும் சோகம் நிலவி வருகின்றது. பாடசாலை நோக்கிப் புறப்பட்ட மாணவர்களில் நால்வரைப் பறிகொடுத்த குடும்பத்தினர் அழுது புலம்பியபடி உள்ளனர். அவர்களது துயரத்தைப் பார்க்கையில் எமக்கும் கண்ணீர் வருகின்றது. மீதமான இருவரின் குடும்பத்தினரும் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இவ்வாறான துயரம் இனிமேலும் நிகழ்ந்து விடக் கூடாதென்பதே அனைவரதும் பிரார்த்தனையாக உள்ளது.

வெறும் படகுகளை வைத்து பலகை பரப்பி படகுப்பாதை தயார் செய்தவர்கள் யார்? அதற்கு அனுமதி அளித்தவர்கள் யார்? நூற்றுக்கணக்கானவர்கள் பயணிக்கும் பாதையை பொறுப்பின்றி கட்டமைத்தவர்கள் யார்? ஆபத்தான பாதை எனத் தெரிந்தும் அங்கு அனர்த்த முன்னாயத்தங்கள் செய்யாமல் அசண்டையீனம் செய்தவர்கள் யார்?

இந்தக் கேள்விகள் அத்தனைக்கும் சம்பந்தப்பட்டவர்கள் பதில் தர வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்ப்பார்ப்பு. எத்தனை கனவுகளுடன் பள்ளிக்குச் சென்றிருக்கும் அந்தப் பிஞ்சுப் பாலகர்களை படகுப் பாதையூடே கொலை செய்து விட்டனரே.

இவ்விடயம் தொடர்பில் கிண்ணியா பிரதேசசபை தவிசாளர் உட்பட நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெறும் கைதுகளுடன் மட்டும் நின்றுவிடாமல் இந்த அனர்த்தத்திற்கு அசண்டையீனம் காட்டிய அத்தனை பேரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அவர்களுக்குத் தண்டனை பெற்றுத்தர வேண்டும். அவ்வாறு மேற்கொண்டால் மாத்திரமே இனி ஒரு அநியாய பலி எடுப்பு நடைபெறாது.

அதிகாரிகளின் கவனயீனத்தினால் இன்று ஆறு உயிர்கள் அநியாயமாகப் பலி கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த உயிர்கள் சாந்தியடைய இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

# சிறுவர் அரங்கம்

## உலகத்தின் மையப்பகுதி எது?

முன்னொரு காலத்தில் சீனப் பேரரசர் ஒருவர், தன்னைவிட அறிவுடையவர் யாரும் இல்லை என்று நினைத்தார்.

அதை எல்லோருக்கும் தெரியப்படுத்த என்ன செய்வது என்று சிந்தித்தார். நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.


பல நாடுகளில் இருந்தும் பத்தாயிரம் அறிஞர்களைத் தன் அரசவைக்கு வரவழைத்தார். அவர்களைப் பெருமையுடன் பார்த்தார் அவர்.

"அறிஞர் பெருமக்களே! உலகத்தின் மையப் பகுதி எங்கே உள்ளது சொல்லுங்கள்?" என்று கேட்டார் அவர். யாருமே பதில் சொல்லவில்லை. மகிழ்ச்சி அடைந்த அவர், முரசு அடிப்பவனை அழைத்தார்.

"உலகத்தின் மையப் பகுதி எது? சரியான விடை சொல்பவர்களுக்கு பத்தாயிரம் பொன் பரிசு. விடை தவறாக இருந்தால் தூக்குத் தண்டனை. இந்தச் செய்தியை நாடெங்கும் தெரிவி" என்றார்.

அவனும் அப்படியே முரசு அடித்துத் தெரிவித்தான்.

நாட்டு மக்கள் எல்லோரும் இதைக் கேட்டனர். யாரும் விடை சொல்லும் முயற்சியில் இறங்கவில்லை, இந்த அறிவிப்பை வினு கேட்டான்.



"இந்தக் கேள்விக்கு யாராலும் பதில் சொல்ல முடியாது என்று நினைத்த அரசரை எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்த வேண்டும்" என்று நினைத்தான்.

தன் கழுதையில் அமர்ந்த அவன் அரண்மனைக்குள் செல்ல முயன்றான்.

அங்கிருந்த காவலர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினர். "யாரும் கழுதையுடன் உள்ளே செல்லக்கூடாது," என்றனர்.

"இந்தக் கழுதை இருந்தால்தான் என்னால் பேரரசரின் கேள்விக்கு விடை தர முடியும். இதையும் உள்ளே அனுமதியுங்கள்" என்றான் வினு.

பேரரசரிடம் சென்ற அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். "கழுதையுடன் அவனை உள்ளே அனுப்பு" என்றார் அரசர்.

கழுதையை இழுத்துக் கொண்டு அரசவைக்குள் வந்தான் வினு. அங்கிருந்த எல்லோரும் அவனை வியப்புடன் பார்த்தனர்.

(தொடரும்)

# மகாபாரதம்

257


கிராமங்களையும் இரத்தினங்களையும் தருவேன். இன்னும் என்னென்ன உங்களுக்குத் தேவையோ கேளுங்கள் தருகின்றேன்" என்றான்.

ரிஷிகள் மன்னனிடம் தானம் வாங்க விரும்பவில்லை. மன்னர் தரும் தானம் முதலில் இன்பம் தருவது போல இருந்தாலும் முடிவில் துன்பம் தரும்.

ஆயிரம் கசாப்புக் கடைகளை வைத்திருக்கும் கசாப்புக்காரனும், மன்னனும் சரி.

எனவே மன்னனிடம் தானம் வாங்குவது தீமை பயக்கும். பொதுவாக அந்தணர்களுக்குத் தவம் எளிதில் கிடைக்கும்.

மன்னனின் பொருள் காட்டுத்தீயைப் போல



அந்த தவத்தையே எரித்து விடும்..என்று கூறி ரிஷிகள் காட்டுக்குச் சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து செல்லுமாறு அமைச்சர்களை அனுப்பினான் மன்னன். அத்திப் பழங்களைப் பறித்துத் தந்தனர் அமைச்சர்கள்.

ரிஷிகள் அப்பழங்களை வாங்கச் சென்ற போது மன்னனின் வேலைக்காரர்கள் உள்ளே பொன்னை வைத்துத் தந்தனர்.

அத்ரி முனிவர் அவைகளை வாங்க மறுத்துப் பேசினார்.. "நாங்கள் முட்டாள்கள் அல்ல. இவற்றின் உள்ளே பொன் உள்ளதை அறிவோம். நாங்கள் ஏமாற மாட்டோம். மறுபடியும் சொல்கிறேன்.

அரசன் தரும் பொருள் மறுமை இன்பத்தை அளிக்காது. இம்மை மறுமைகளில் இன்பம் வேண்டுவோர் அரசர் தரும் இத்தகைய பொருள்களை வாங்கவே கூடாது" என்றார்.

கச்யபர், "பூமியில் பொன்னும் பொருளும் போகமும் விரும்பத்தக்கது அல்ல" என்றார்.

வஷிஷ்டர், "நூறு ஆயிரம் என மிகுதியான பொன்னை வாங்கினால் தாழ்ந்த கதி தான் கிடைக்கும்" என்றார்.

பரத்வாஜர், "மான் குட்டி வளரும் போது கூடவே வளரும் கொம்பு போன்றது ஆசை. அது வளர்ந்து கொண்டே போகும். அதற்கு எல்லையே இல்லை" என்றார்.

கௌதமர், "ஆசை நிறைவேறுதல் என்பது இல்லை. நதி நீரால் கடல் நிரம்பாதது போன்றது ஆசை. ஒரு நாளும் மனிதன் நிறைவடைய மாட்டான்" என்றார்.

ஜமதக்னி, "பிறரிடம் வாங்குவதற்கும் மனக் கட்டுப்பாடு வேண்டும். ஆசைப்படுபவர்களுக்குத் தவம் என்னும் செல்வம் தொலையும்" என்றார்.

விசுவாமித்திரர், "ஒரு விருப்பம் நிறைவேறும் போதே மற்றொரு விருப்பம் அம்பு போல மனதில் பாயும்" என்றார்.

சீலம் மிக்க ரிஷிகள் அனைவரும் உள்ளே பொன் வைத்த அக்கனிகளை ஏற்க மறுத்து வேறு இடம் சென்றனர்.

பின்னர் அமைச்சர்கள் மன்னனை அடைந்து நடந்ததைக் கூறினர். அதைக் கேட்ட விருஷாதர்ப்பி சினம் கொண்டான்.

கடுமையான யாகத்தைச் செய்தான். யாக குண்டத்தீயிலிருந்து பெண் பேய் ஒன்று தோன்றியது.

(தொடரும்)



**தலைவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் வியாசரே?**

**திருவரதராசா — வவுனியா**

**பதவிகள் எதற்காக. பவுசாக வாழ்வதற்கா? மக்கள் சேவைக்கா?**

பதவி என்பதே மக்கள் சேவைக்கானது தானே.
ஆனால் இன்று அது மோகமாய் போய் விட்டது.
மக்கள் சேவை செய்வேன் என்று உறுதி மொழியெடுத்து பதவிக்கு வந்ததும் எப்படி சொத்துச் சேர்க்கலாம்? எப்படி காருக்கான போமிட்டை வாங்கலாம்? எப்படி அடுத்த முறை பாராளுமன்றம் போகலாம்?
அதற்கு எப்படி எப்படிப் பேசினால் மக்கள் மருளுவார்கள்.
இப்படி AC ரூம் போட்டு யோசித்து பிரயோகித்து பதவியைப் பிடித்து அதன்பின் தமிழினத்தின் முன் நடித்து நன்றாக சேவை செய்வார்கள். இதுதான் பவுசுக்கான பதவி.
இவர்களை வெச்சுச் செய்ய வேண்டியது மக்கள் மாத்திரமே.

**ஸ்ரிப் — யாழ்ப்பாணம்**

**இலங்கை கிரிக்கெட் அணி மீண்டெழுவதை உணர முடிகிறதே வியாசரே?**

மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் தொடரின் நல்ல ஆரம்பத்துடன் தொடங்கியிருக்கிறது இலங்கை அணி.
இளம் வீரர்களை வைத்து மிகவும் திறம்பட வழிநடத்திச் செல்கிறது கிரிக்கெட் சபை.
இந்த இளம் படைகளுடன் கொஞ்சம் அனுபவ வீரர்களையும் இணைத்தால் நிச்சயம் மிகச் சிறந்த அணியாக இலங்கைக் கிரிக்கெட் அணி மிளிரும் என்பது உண்மை.
பொறுத்திருந்து பார்ப்போமே! இனி எப்படி செயற்படப் போகிறது இலங்கை அணி என்பதை.

**சுதன் — குப்பிழான்**

**மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு நீதி மன்ற அனுமதி, ஆட்சியாளர்களுக்கு கெடிக்கலக்கமாய் இருக்குமே?**

இறந்த உறவுகளை நினைவுகூருவதற்கு தடை விதிப்பதென்பது உலக வரலாற்றில் இல்லாத ஒன்று.
பயங்கரவாதத்தை பூண்டோடு அழித்து விட்டோம். எனி எங்களிடம் வந்து உலக நாடுகள் பயங்கரவாதத்தை அழிப்பது எப்படி என பாடம் படிக்கலாம் என்று கூறி விட்டு நினைவேந்தலுக்கு தடை போடுவது எந்த வகையில் ஏற்கக் கூடியது.
இறந்த தன் மகனை நினைவுகூருவதற்கு ஒரு தாய்க்கு உரிமையில்லையா?




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இதழினி — திருநாவலூர்**


**நமக்கு கருத்துச் சுதந்திரம் இல்லாத இடத்திலிருந்து நாமே விலகுவது நல்லது தானே?**

ஓரிடத்தில் பேசி அவமானப்படுவதைவிட மௌனமாய் இருப்பது எவ்வளவோ மேலானது.
ஒரு நிகழ்வில் ஒருவர் இடைவிடாது பேசிக் கொண்டே இருக்கின்றார். அடடா இவர் எப்படா பேசுவதை நிறுத்துவார் என்ற மன நிலையே அந் நிகழ்வில் இருப்பவர்களுக்கு இருக்கும்.
அதே ஒருவர் அமைதியாக இருப்பாராயின் அவரேன் அமைதியாக இருக்கின்றார்.பேசமாட்டாரா? என்ற எதிர்பார்ப்பு அவர் மீது எழும்.
கருத்துச் சுதந்திரம் இருக்கிறது என்று கருத்துக் கந்தசாமியாய் இருந்தால் வெறுப்புத்தான் வரும்.

**தமிழ் — கிளிநொச்சி**

**காலம் பின்னோக்கிச் சென்றால் எப்படியிருக்கும் வியாசரே?**

இல்லைத் தம்பி வேண்டாம். காலம் பின்னோக்கிச் சென்றால் நல்லம் தான்.
ஆனால் தமிழினம் பட்டபாடுகளை மீண்டும் நினைக்க மனம் ரணமாகிறது.
கொத்துக் குண்டு பட்டு தமிழினம் கொத்துக் கொத்தாய் மாண்டு போனதையும் திட்டமிட்டு தமிழினத்தைக் கொன்றொழித்த செயலையும் மீண்டும் நினைக்க தமிழினத்தால் முடியாது தம்பி.
அந்தக் கொடூரம் நடந்தேறாமல் இருந்தால் அதன் முன்னைய காலங்கள் வசந்த காலங்களாய் நினைவில் ஆடும். அந்தக் காலங்களை மட்டும் நினைவில் கொள்வோமே.



**மாவீரர் நாள் நிகழ்வுகளுக்கு நீதி மன்ற அனுமதி, ஆட்சியாளர்களுக்கு கெடிக் கலக்கமாய் இருக்குமே?**

**சிவன் — வதிரி**

**எம் அடுத்த சந்ததி தமிழினம் பட்டபாட்டை மறந்து செயற்படுமா வியாசரே?**

செயற்பட வாய்ப்பிருக்கிறது. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டு மென்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழினத்தின் வீரத்தையும் தமிழினம் பெற்ற வெற்றிகளையும் தமிழினம் செய்த தியாகங்களையும் தமிழினம் பட்டபாட்டையும் தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்பட்டதையும் எம் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.
இல்லையேல் பண்டார வன்னியன் – சங்கிலிய மன்னன் என்ற எல்லையுடன் எம் பிஞ்சுகள் நின்று விடுவார்கள்.
எம் பிந்திய வரலாறுகளை இனி எம் பிள்ளைகள் பாடப்புத்தகத்தில் படிக்கும் வாய்ப்பு இருக்காது.
ஆதலால் நாமே எமது வரலாற்றை எம் பிள்ளைகளுக்கு ஊட்டுவோம்.

**ராஜ் — மானிப்பாய்**

**தலைவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும் வியாசரே?**


மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, மக்கள் உரிமைக்காக, மக்கள் கண்ணீர் துடைக்க அவர் துன்பப்பபடும் போது தன் உயிரையும் பாராமல் தன்னலம் கருதாது எவன் எழுகிறானோ அவனே உன்னத, மேதகு தலைவன்.இப்போதெல்லாம் அப்படி யாரும் பிறப்பதில்லை போல.
சுயநலமுள்ளவர்கள் தன் வீடு , தன் குடும்பம், தனக்குக் கார், தனக்குப் பதவி, தனக்கு சொத்து சுகம் எல்லாவற்றையும் சேர்த்து விட்டு தன்னைத் தானே தலைவன் என்று சொல்லித் திரிக்கின்றார்கள்.
இதில் இவர்கள் புகழ் பாட வால்கள் வேறு.
கடவுளே உன் அவதாரத்தில் மீண்டும் எமக்கொரு தலைவனைத் தரமாட்டாயோ?

**அருமை — கிளிநொச்சி**

**பணம் வந்தவுடன் மாறும் உறவுகளை நினைக்க கவலையாகவுள்ளதே வியாசரே?**

இப்பேர்ப்பட்டவர்களுக்கெல்லாம் நீங்கள் உறவு என்று அடைமொழி கொடுத்தால் அதற்கு யாம் ஏதும் செய்து விட முடியாது.
பணம் கண்ணை மறைக்கும் மனிதரை மிருகம் என்ற வகைக்குள் கூட என்னால் அடக்க முடியாது.
பணம் சேர்க்கலாம்.ஆனால் அதை போதையாய் ஏற்றக் கூடாது.
பணம் சேர்ப்பதை விட அன்பைச் சேர்த்தால் இறுதியில் காடு வரை கூடவரும் உறவுகள் சேரும். அது ஒன்றுதான் நிரந்தரம்.
சுடலையில் அரைஞாண் கயிற்றைக் கூட அடுத்தெடுத்த பின்பு தான் எரியூட்டுவார்கள். இதை நினைவில் வைத்திருந்தால் எல்லாம் சரி.

## அனைத்தும் என் தாயவளே



அன்பும் நீ அறிவும் நீயே
ஆருயிர் நீ ஆள்பவளும் நீயே
இன்பம் நீ இணையில்லா தெய்வமும் நீயே
ஈகைக்குரியவள் நீ ஈடில்லா தாயும் நீயே
உறவுக்கு உரியவள் நீ உற்ற துணையும் நீயே
ஊக்கம் நீ ஊக்கம் அளிப்பவளும் நீயே
என் உயிர் நீ எனக்காய் உருகுபவள் நீயே
ஏற்றம் இறைத்தவள் நீயே ஏணியானவளும் நீயே
ஒற்றுமைக்கு உரியவள் நீ ஒழுக்கம் தந்தவளும் நீயே
ஔவை காட்டியவள் நீ
ஔவைப்பாட்டுச் சொன்னவளும் நீயே
மொத்தத்தில் அனைத்தும் என் தாயவளே
நன்றிகள் பல

எஸ்.கலாமணி
வட்டாரம்-08, மண்டைதீவு.

## இந்நாட்டில் எப்படி வாழ்வேனோ?

புகழுடை வளங்கள் புகழுறும் மண்ணரம்
புத்துயிர் தளைத்த ஈழம் ஒன்று

தலை உரித்தமிழன் தனை விட்டுச் செல்ல
தாய்பெயர் அறியா பரம்பரை ஓங்குது

பணவெறி படைத்த பலரின் செயலால்
மூக்கினால் சிறியவர் முழு நிலம் பெறுவரோ?

இத்தனை வருடங்கள் கடந்த ஆட்சியில் கூட
இத்தனை சிறப்புக்கள் நடந்ததாய் அறிவேன்

விலைகள் உயரும் பட்டியல் படிக்க
புதிதாய் ஏதும் படிப்பினை கற்பேன்

குடும்பக் கடன்களை போராடி ஒழிக்க
நாட்டுக் கடன்களை எவன்தான் ஒழிப்பான்

நாட்டுப் பற்றினை உடைய தமிழனாய்
வேதனை கொண்டேன் இத்தமிழ் கவியுடன்

ந.விதுஷன்,
யா/ கற்கோவளம்
மெ.மி.த.க. பாடசாலை

## கொள்ளை அழகு



அந்திப் பொழுதினிலே ஆதவன் மறைவினிலே
வானவீதியிலே மேகக் கூட்டங்களிடை
மெது மெதுவாய் உன் விம்பம் தனை கண்ணுற்று
என் கண்கள் சொக்கித் தவிக்கின்றதே
முத்தொளி போன்ற உன் வெண்மையிலே
என்மனது பறிபோனது தான் ஏனோ?
நீலத்திரையிடையே நிதர்சனமாய் தோன்றி
நிசப்தமாய் எனைக் கொள்ளை கொண்டு
மனம் எனும் பெருங்கடலிலே தெப்பமாய்
மிதக்கவிட்டு தெவிட்டாத இன்பம்
அளித்ததன் விந்தைதான் என்னவோ?
வட்டமாய் வானிலே வண்ணமயத்துடன் தோன்றி
வாஞ்சையுடன் பரிவட்டம் இட்டதன்
மகிமைதான் என்னவோ?
உன்னிடம் என்னைப் பறிகொடுத்து இன்று
நூலறுந்த பட்டம் போல் எனது நிலை ஆனது ஏனோ?
அன்புநிறைந்த இக்கவிதை தனை காதலனுக்கு
வரைந்ததாக எண்ணிடும் வேளை
நானோ கூறிடுவேன் என்னைக் கொள்ளையிட்ட
வட்டநிலவும் விண்மீனும் நீங்களென்று

ஆ.பாலமதுஜா, திருநாவலூர்
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல்-538



### பசியுடன்

பணம் படைத்த
ஆடம்பர விரும்பிகளின்
விசேட நிகழ்வுகளில்
விதம்விதமாய் உணவுகள்
வீணாகிச் சேதமுற
எவ்வுணவு கிடைத்தாலும்
உண்டு பசியாற
பட்டினி வயிறுகள் பல
பசியுடனிருக்கின்றன

சி.இளங்கோ
மானிப்பாய்
வடக்கு

### மனதினில் இரக்கம்

கொடுமையில் கொடுமை இளமையில் வறுமை
படுந்துயர் அனைத்தும் வருந்திடக்கூட
வயதிலா குழந்தை ஒளிமயமான
எதிர்காலம் மலர மனதினில் இரக்கும்
கொள்வோமா மனிதா

சங்கீதா, சரவணை

### இல்லாராய் ஏனோ?

எல்லா வளங்களையும்
இயற்கை அள்ளிக் குவித்திருந்தும்
இல்லாராய் ஏனோ
இதன் படைப்பில்
இத்துணை பாகுபாடு
இதுவும் கடந்து போம்
என்றே இரங்கிடுவீா வாரீா

சிவா ஹரிஷ், காவலூர்.

### ஏழைகளுக்கு உணவளிப்போம்

கோப்பையில் உணவு உண்ணும்
ஏழைச்சிறுமியே! உன்னைப் போன்ற
ஏழைகளுக்கு வாழ்வில் தினம்
உணவென்பதே ஒரு கனவாக உள்ளது
அதையே கருணையோடு
அளித்தால் இறந்த பின்பு
நாம் போகும் வழிக்கு நல்லது


சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### பசியைப் போக்குதற்கு

தட்டில் உணவளித்து தளிர்
பசியை போக்குதற்கு
மட்டுமல்ல மானுடர்க்கு அன்பு கருணையொடு
அருங்கலையாம் கல்வி விழுமியத்தை
வழங்கி வாழ்வளிப்போம் எழுந்திடுவீா

தீபிகா, சரவணை

## மௌனத்தின் தேடல்- 539



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### ஏன் இந்த அவலம்

வாட்டும் பசிக்கொடுமையினால்
வாய் நிறைய உணவை வைத்தாலும்
சத்தான உணவுமில்லை
சாப்பிடவும் முடியவில்லை
சொத்தான கல்வியுமில்லை
சுகமான வாழ்வுமில்லை
பள்ளி வாசல் மறந்து விட்டோம்
பாடங்களையும் மறந்து விட்டோம்
எத்தனை காலம் தான் இந்த அவலம் எங்களுக்கு?
கொரோனா வைரஸின் தாக்கத்தாலா?
கொடூர விலைவாசி ஏற்றத்தாலா?
படாத இன்னல் படுகின்றோம்
பாவம் என்ன நாம் செய்தோம்
இறைவா நீயே வழிகாட்டு

சி.கஜா, முரசுமோட்டை

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**கடலில் மிச்சமிருந்த வெளிச்சத்தில் எல்லோருமே ஓரளவுக்கு மூழ்கிக்கொண்டிருந்தனர். மீண்டு எழுகின்றவர்களின் கடைசி ஒப்பாரி, அறுத்த கோழியின் கடைசிக் குரல்போல சகல திசைகளிலும் கூவலாகக் கேட்டது.**

## வலி சொல்லும் தொடர்... 09

"நீந்தத் தெரிஞ்ச ஆக்கள் கொஞ்ச நேரம் வெளியில குதிச்சு, படகைப் பிடிச்சுக்கொண்டு நில்லுங்கோ. பொம்பிளையள் மாத்திரம் முன்னுக்கு நில்லுங்கோ."

அச்சத்தில் வரண்ட நகுலனின் குரல் நடுக்கத்தோடு பிளிறியது. அதைப் பார்த்தவர்கள் மேலும் குழறினார்கள். அவன் சொல்லி முடிப்பதற்குள் 'பொத் பொத்'தென்று கொஞ்சம் பேர் கடலுக்குள் குதித்தார்கள்.

குடும்பங்கள் இல்லாமல், தனியாக வந்தவர்கள் குதித்தேயாக வேண்டும் என்றானது. குதிக்காமல் நின்றவர்களை குற்றவாளிகளைப் போலப் பார்த்தார்கள்.

இந்தக் கடலின் அடியில், தன் உயிர் தன்னிடமிருந்து கழன்று விழப்போவதை நிச்சயமாக நம்பினான். நகுலன் பேசிய செய்மதித் தொலைபேசியை எடுத்து, ஒரு குரலை மாத்திரம் கேட்டுவிட்டுச் செத்துவிடலாம் என்ற இறுதிப்பீதி நெஞ்சில் அனுங்கியது.

பெரும் சத்தத்தோடு படகு முறிந்தது. முன்பக்கமாக கடலுக்குள் சரிந்தது. பாறி விழுந்தவர்களின் குழறலையும் கடல்குடிக்கும் ஓலதையும் வானம் கருணையின்றிப் பார்த்துக் கிடந்தது.

இருட்டுக்கடல் படகின் பிணத்தை கொஞ்சம் கொஞ்சமாகத் தின்றது. மூர்க்கம் தீராத சிதை நெருப்பு, கடல்மீது இன்னமும் எரிந்து தனது ஊழிப்பெருங்களிப்பை முடித்துக்கொண்டிருந்தது.

செத்த படகின் பிண வாசனை கடல் முழுவதையும் ஆக்கிரமித்தது. புகையின் மீதி வானில் மேலெழுவது தெரிந்தது.

கடலில் மிச்சமிருந்த வெளிச்சத்தில் எல்லோருமே ஓரளவுக்கு மூழ்கிக்கொண்டிருந்தனர். மீண்டு எழுகின்றவர்களின் கடைசி ஒப்பாரி, அறுத்த கோழியின் கடைசிக் குரல்போல சகல திசைகளிலும் கூவலாகக் கேட்டது.

படகிலிருந்து பிளந்து மிதக்கும் கருகிய கட்டைகளை நெஞ்சோடு அணைத்தபடி சிலர் குழறினார்கள். மூங்கில் தடிகளை சிலர் இரண்டு கைகளுக்குள்ளேயும் கொடுத்தபடி குரலின்றிக் கதறினார்கள்.




மிதந்து வந்த நீல நிற பிளாஸ்டிக் பேரலை நீதன் பிடித்திருந்தான். அல்லது அது அவனைப் பிடித்திருந்தது. அந்த பேரலை இதற்கு யாரோ பிடித்திருந்து, முடியாமல் மூழ்கிப் போன பின்னர், தனது கைகளுக்கு வந்ததை அவன் உணர்ந்தான். பிளாஸ்டிக் பேரலை கைகளால் கவ்வி, நெஞ்சோடு பிடித்துக் கொள்ளும் போதெல்லாம், அதில் இழுபட்டுக் கொண்டிருந்த ஆடைத்துண்டொன்று கைகளுக்குள் இடறியது.

திரும்பிய இடமெல்லாம் பிளந்த வாய்களோடு தலைகள் ஓலமிட்டன. பழக்கமான மரணத்தைப் பார்த்தபடி அலைகள் விலகிச் சென்றன.

தன் பழிவாழ்வின் கடைசித் தருணங்களை எண்ணி நீதன் தன்னை அறியாமல் அழுதான். தனித்திருந்த தேவதையின் மிருதுவான கைகளில் பேருவகை மிக்க நாள்களை தான் ஒப்படைத்த கணங்களை நினைத்தான்.

புதைமணலில் நின்ற அவளின் கைகளை அறுத்துவிட்டு, படகேறிய பழிநாளை எண்ணிப் பார்த்தான். தன் உயிரின் மீதியை வருந்திப் பெற்றவளின், ஒருநாள் அன்புக்குக் கூட இனித் தான் தகுதியில்லை என்று நெஞ்சு வெடித்தான். இந்தப் பெருவெளியில் தனது பிணம் மிதப்பதை ஒரு கணம் கற்பனை செய்தான். அச்சத்தில் நீல பேரலை இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

புகையோடு சேர்ந்து கடல் நாறியது. அலைகளின் மேலே தெரிந்து கொண்டிருந்த தலைகளின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது.

திடீரென கடலைப் பிளந்தபடி இயந்திரச் சத்தங்கள் கேட்டன. வேகமாக வந்துகொண்டிருந்த வெளிச்சங்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வட்டம் போட்டன. உப்புத்தண்ணீரில் ஊறி நாறிய உடம்பு, வெளிச்சத்தைக் கண்வெடித்துப் பார்த்தது.

நான்கு படகுகளில் வந்த இந்தோனேசியப் படையினர், வெளிச்சமடித்து, தெரிந்த தலைகளுக்கு கயிறு போட்டார்கள். குப்பை அள்ளுவதைப் போலத் தூக்கினார்கள். இருட்டில் யாரையும் யாரென்று தெரிய வில்லை. யார் உடலில் உயிருள்ளது என்றும் தெரியவில்லை.

படகில் வந்திருந்த மருத்துவர் ஒருவர், ஒவ்வொருவரையும் கன்னத் தில் அடித்து அடித்து, உயிரோடிருப்பதை உறுதிசெய்தார். படையினர் சிலர் வயிற்றை அழுத்தி தண்ணீரை வெளியே பீய்ச்சியெடுத்தனர். படகில் கிடந்த துணிகளை ஒவ்வொருவருக்கும் தூக்கிப்போட்டனர்.

நீதனுக்கு அருகில் யார் கிடக்கிறார்கள் என்று திரும்பிப் பார்ப்பதற்குக்கூட கழுத்தில் பலம் இருக்கவில்லை. அலைச்சத்தமும் மோட்டார் இரைச்சலும் இன்னமும் செவிக்குழியில் அரித்தபடியிருந்தன. எண்ணெய் மணம் நாசியிலேயே ஒட்டிக்கிடந்தது.

விழுங்கிய உப்புநீர் உடம்பின் உள்ளே அமிலமாக எரிந்தது. படகுக்குள் தூக்கிப்போட்ட பலரும் மாறி மாறி வாந்தியெடுக்கும் சத்தம், நரம்புகளை அறுத்தது.

வெளியே மீதிப் படகுகள் மிதப்பவர்களைத் தொடர்ந்து துழாவிக் கொண்டிருந்தன. அப்போது புதிய படகொன்றின் சத்தம் வெளியில் கேட்டது. ஐந்தாவது படகு அங்கு வேகமாக வந்தது. அதிலிருந்த சீருடையணியாத சிலர், கடற்படையினரின் படகுக்கு அருகில் வந்து வெகுநேரமாகப் பேசினார்கள்.


பிறகு, ஐந்தாவது படகிலிருந்து சில பெட்டிகள் கடற்படையினரின் படகுகளுக்குள் வந்தன. சிறிது நேரத்தில், எல்லோரையும் ஐந்தாவது வேகப்படகில் ஏறச் சொன்னார்கள். நடக்கவே முடியாமல் தள்ளாடியவர்களை, ஐந்தாவது படகில் வந்த ஐந்தாறு பேர் தூக்கிப் போனார்கள். பிளாஸ்டிக் விரிப்பில் எல்லோரையும் வளர்த்தினார்கள்.

நடுக்கடலில் கடற்படையிடம் பணம் கொடுத்து, குருவியில் காப்பாற்றப்பட்ட அகதிகள் அனைவரும், ஏற்கனவே அவுஸ்திரேலியா போய்க் கொண்டிருந்த இன்னொரு படகில் கொண்டு சென்று ஏற்றப்பட்டார்கள். தன்னோடு சேர்த்து முப்பத்து நான்கு பேர், மூழ்கிய படகிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள் என்ற செய்தி, நீதனுக்கு இரண்டாவது படகில் ஏற்றும்போதுதான் தெரியவந்தது. அடுத்த நாள் கண்விழித்தபோது கேட்ட படகின் இரைச்சல், முதல் நாள் பேரவலத்தை முகத்தில் அறைந்தது.

(அடுத்த வாரம் தொடரும்)

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!




அமீர் விளைவித்த குழப்பத்தின் விளைவாக அணி வகுத்து வர முடியாமல் தாறுமாறாக வந்த புரவிப் படையின் முகப்பில் வந்த வீரனொருவன் புரவியின் வயிற்றில் கண்ணிமைக்கும் நேரத்தில் தன் வாளைப்பாய்ச்சி இழுத்த கருணாகர பல்லவன் மல்லாந்து அந்தக் குதிரையிலிருந்து விழுந்த வீரனின் கழுத்திலும் கத்தியைப் பாய்ச்சி விட்டு அவன் கையிலிருந்த வேலை எடுத்து எதிரே வந்த நாலைந்து புரவி வீரர்களில் ஒருவன் மீது வீசினான்.

வேலை நேராக மார்பில் தாங்கி மாண்டு விழுந்த அந்த வீரனின் குதிரை மீது ஒரே தாவாகத் தாவி ஏறிய சோழர் படைத் தலைவன் குதிரையைக் கண வேகத்துடன் அப்புறமும் இப்புறமும் திருப்பியும் தன் நீண்ட வாளை மின்னல் வேகத்தில் சுழற்றியும் வண்டியைப் பின்பற்ற முயன்ற புரவி வீரர்களைத் தேக்கினான்.

அமீரின் வண்டி திடீரென முன்னோக்கிப் பாய்ந்து சென்றுவிட்டதாலும் தன் ஆணைப்படி காவல் வீரர்கள் வண்டியைத் தொடர முற்பட்டதாலும் பின்னால் தங்க நேர்ந்த பீமன் தன் கண்ணெதிரே நடந்து கொண்டிருந்த வீர ஜாலத்தைக் கண்டு நம்ப முடியாமல் வியப்பின் வசப்பட்டு, குதிரையில் அசையாமல் சில விநாடிகள் உட்கார்ந்து விட்டான். அமீரின் வண்டி திடீரெனப் பாய்ந்த வேகம், புரவிப் படை வரிசையில் மூன்று வீரர்கள் திடீரென உருண்டு மாண்டது, வரிசை பிளந்து வண்டியோடியது,

இத்தனையும் பீமனுக்கு வியப்பை அளித்ததென்றால், இளையபல்லவன் வண்டியிலிருந்து குதித்துக் குதிரையொன்றை மாய்த்துத் தன் வீரர்களைக் கோட்டை வாசல் முகப்பிலேயே தேக்கியதன்றி, தன் காவல் வீரனொருவனின் புரவி மீதும் தாவி வாளைச் சுழற்றிக் குதிரையைத் திருப்பி வளைந்து வளைந்து போரிடவும் முற்பட்டது ஆச்சரியத்தின் எல்லையையும் தாண்டி அவனைக் கொண்டு சென்றது. அதன் வசப்பட்ட பீமன் அவசியமான நாழிகைக்கு அதிகமாகவே தன் வீரர்கள் தேக்கப்பட்டு விட்டதைக்கூட நினைத்துப் பார்க்கச்சக்தியற்றவனாய் இளையபல்லவனின் துணிவை நினைத்து மலைத்து நின்றான்.

அந்த நினைப்பும் நினைப்பினால் ஏற்பட்ட மலைப்பும் சில விநாடிகள் தான் நின்றன. ஆனால் அந்த விநாடிக்குள் நிகழ்ந்த விபரீதம் கணக்கிட முடியாது. புரவி மேல் ஆரோகணித்து வாளை வீசிக்கொண்டு காலருத்திரன் போல் சுழன்ற இளையபல்லவன் நாலைந்து வீரர்களை மாய்த்து விட்டதன்றி, தனது புரவியைக் கோட்டை வாயிலின் குறுக்கே வடக்கும் தெற்குமாக ஓடவிட்டு, புரவிப் படையினர் யாரும் அருகே வர முடியாதபடி தடுத்து நின்றான்.

அப்படி நின்ற சமயத்தில் தற்காலிகமாகத் தனக்கு ஏற்பட்ட வெற்றியைக் கண்டு பெருமிதமும் அந்த வெற்றியின் விளைவாக அநபாயன், காஞ்சனாதேவி முதலியோர் தப்பிவிட முடியும் என்ற நினைப்பால் மன ஆறுதலும் கொண்டான் இளைய பல்லவன். அந்த மன ஆறுதலுடன் தன் நிலையும் புரிந்தே இருந்தது அவனுக்கு. எதிரே வரிசை வரிசையாக வந்து கொண்டிருந்த வீரர்களுக்குத் தான் பலியாக அதிக நேரமாகாது என்பதை உணர்ந்து கொண்ட கருணாகர பல்லவன், அந்த உணர்ச்சியின் விளைவாகச் சற்றும் கலவரப்படாமல் மிகுந்த வேகத்துடனும் ஆனால் நிதானத்துடனும் போரிட்டான்.

தன் உள்ளத்தைக் கவர்ந்து நின்ற காஞ்சனாதேவியும் அநபாயனும் தப்புவதற்கும் தான் முதல் பலியாவதானால் எதிரிகளைப் பெரும் பலிகொடுத்தே சாவதென்ற முடிவுடன் மிக உக்கிரமாகப் போரில் இறங்கிய இளைய பல்லவன், எதிர் நோக்கி வந்த புரவி வீரர்களின் நால்வர் வாள்களைத் தன் வாளால் மிக வேகமாகத் தடுத்தான்.

அப்படித் தடுத்தும் திடீரெனக் குதிரையை முன் செலுத்தி இரண்டொருவர் மார்புகளில் வாளைப் பாய்ச்சி இழுத்தும் பலி கொடுத்து மெள்ள மெள்ளப் பின்னடைந்தான்.

எதிரேயிருந்த வீரர்கள் மீண்டும் மீண்டும் பலியானதால் அவர்கள் பிரிந்து பக்கவாட்டிலும் வரத் தொடங்கினார்கள். “உம்! சூழ்ந்து கொள்ளுங்கள் அவனை” என்று தூரத்திலிருந்து கூவிய பீமனின் உத்தரவைத் தொடர்ந்து நாற்புறத்திலும் வீரர் நெருங்க முற்படவே, தன் காலம் நெருங்கிவிட்டதென்ற முடிவுக்கு வந்தான் இளைய பல்லவன்.

அவன் வாளைச் சுழற்றிச் சுழற்றிக் குதிரையையும் சுழற்றிப் போரிடப் போரிட எதிரிகளும் அவனை நாற்புறமும் சூழ்ந்தார்கள். அதே சமயத்தில் பீமன் உத்தரவுப்படி மற்றொரு பிரிவு அவனைப் பக்கவாட்டில் தாண்டி அமீரின் வண்டியையும் மிக வேகமாகத் துரத்தியது. அடுத்த விநாடி தன் கழுத்திலிருந்த கொம்பை எடுத்துப் பீமன் மும்முறை ஊதினான்.

அந்த ஊதலால் கடற்கரைப் பிராந்தியமே திடீரென உயிர் பெற்றுத் துடித்தது. அந்தக் கொம்பின் ஒலியால் தூரத்தே சுங்கச் சாவடியிலிருந்த வீரர்கள் பலர் சண்டை நடக்கும் இடத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். வாள்களின் ஒலியினால், இளையபல்லவனின் வாளால் மாண்ட குதிரைகளின் ஓலத்தாலும் அந்தக் கடற்கரை மிகப் பயங்கரமாக எதிரொலி செய்தது. எதிர்பாராத சண்டை ஏற்பட்டதால் படகிலிருந்து மூட்டைகளைத் தூக்கிச் சுங்கச் சாவடிக்குச் சென்றுகொண்டிருந்த பணியாட்கள் மூட்டைகளைக் கீழே போட்டுக் கலவரப்பட்டு ஓடினார்கள்.

இந்தக் குழப்பத்தில் இளையபல்லவன் நிலை விநாடிக்கு விநாடி அபாயமாகிக் கொண்டிருந்தது. வெகு வேகமாக வாளைச் சுழற்றிப் போரிட்ட போதிலும் எதிரிகளின் வாள்கள் விளைவித்த காயங்கள் பலவற்றால் அவன் உடலில் குருதி புறப்பட்டு உடையை நனைத்திருந்தது. அவன் புரவியும் காவல் வீரனொருவனின் வேல் வீச்சால் மாண்டு விடவே அது சாயுமுன்பு நிலத்தில் குதித்த இளைய பல்லவன் நிலத்தில் நின்றபடியே போரிட்டான். அந்த நிலையில் நான்கு புரவிகள் அவனை நோக்கிப் பாய்ந்து வந்தன. அவற்றிடம் துவைபடாதிருக்கப் பின்னோக்கிச் சில அடிகள் ஓடி மீண்டும் போரிடத் திரும்பினான் இளைய பல்லவன்.

அதே விநாடியில் பின்புறத்திலிருந்தும் பெருத்த அபாயம் வந்தது அவனுக்கு. குதிரை வீரர்கள் இளையபல்ல வனையும் தாண்டி வண்டியைத் தொடர்ந்ததால் அமீர் காஞ்சனாதேவி பதுங்கியிருந்த நீர்க்குடத்தின் மூடியை நீக்கி விடவே அநபாயன் உத்தரவுப்படி எரியம்பை ஆகாயத்தில் வீசினாள் காஞ்சனா தேவி. ஆக்னேயாஸ்திரம் போல் வான வீதியில் இருளைக் கிழித்துக் கொண்டு சென்ற அந்த எரியம்பின் மர்மம் அறியாத குதிரை வீரர்கள் திடீரெனப் பேராபத்தில் சிக்கினார்கள்.

எரியம்பின் அடையாளத்தைக் கண்டதும் குதிரைச்சாலைத் தலைவன் முன்னேற்பாட்டின்படி தயாராக வைத்திருந்த முரட்டு அரபுப் புரவிகளின் தளைகளைப் பல ஆட்களைக் கொண்டு ஒரே சமயத்தில் தரித்துவிடவே, கிழக்குக் கோட்டை வாசலுக்கு அடியிலிருந்த கடற்கரை மணலில் இருபது வெறி பிடித்த புரவிகள் வாயு வேகத்தில் தாறுமாறாகப் பறக்கத் தொடங்கியதால் பயங்கரமான பெரும் குழப்பம் அந்தப் பிராந்தியத்தில் ஏற்படவே செய்தது.

அசாத்தியமான வேகத்துடனும், திடீர் திடீரென கால்களைத் தரையில் உதைத்து மணலைக் கிளப்பிக் கொண்டும் பயங்கரமான விதவிதமான கனைப்புகளுடன் அந்த உயர்ந்த சாதி அரபுப் புரவிகள் குறுக்கே ஓடியதால் வண்டியைத் துரத்திய புரவி வீரர்கள் தடுக்கப்பட்டனர்.


பழக்கப்படுத்தப்படாத அந்த அரபுப் புரவிகள் மிகுந்த வேகத்துடன் அப்புறமும் இப்புறமும் அம்புகள் போல் பாய்ந்து பாய்ந்து திரிந்தன. சில புரவிகள் குதிரை வீரர்களின் குதிரைகளையும் தாண்டி எழும்பியதால் அவற்றில் ஆரோகணித்திருந்தவர்கள் மணலில் புரண்டார்கள். மணலில் புரண்ட சிலர் சில புரவிகளின் குளம்புகளில் சிக்குண்டு கதறினார்கள்.

அந்தப் பயங்கரப் புரவிகள் பழக்கப்பட்ட படைப் புரவிகளை உதைத்தன, கடித்தன. திடீர் திடீரெனத் திரும்பித் திரும்பி ஓடின. மீண்டும் திரும்பித் திரும்பிப் பாய்ந்து வந்தன. சுதந்திரமாகத் தாங்கள் திரிந்த அரபுப் பாலைவன இராச்சியத்தை இங்கு ஸ்தாபித்தன.

புரவி வீரர்களுடன் போரிட்டுக் கொண்டு பின்னுக்கு நகர்ந்த இளையபல்லவன் ஒருமுறை பின்னுக்குக்கண்ணை ஓட்டி அங்கு நிகழ்ந்த பயங்கரத்தைக் கண்டான்.

(தொடரும்...)

# மாநாடு திரைவிமர்சனம்




**த**ன் நண்பனின் திருமணத்தை நடத்தி வைக்க டுபாயில் இருந்து கோயம்புத்தூருக்கு வருகிறார் அப்துல் காலிக் (சிம்பு).

நண்பனுக்கு திருமணம் செய்து வைக்க முயற்சி செய்யும் போது ஒரு பிரச்சினை ஏற்படுகிறது. அதில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் முதல்வரை கொலை செய்ய வேண்டும் என்று காவல் துறை அதிகாரியான தனுஷ் கோடி (எஸ்.ஜே. சூர்யா) தெரிவிக்கிறார்.

அவர் பேச்சை கேட்டு அப்துல் காலிக்கும் முதல் வரை கொன்று விடுகிறார்.

அப்பொழுது கண் விழித்த போது தான் அவர் இன்னும் விமானத்தில் இருப்பது அப்துல் காலிக்கிற்கு தெரியவருகிறது. மேலும் டைம் லூப்பில் சிக்கியதும் அவருக்கு புரிகிறது.

ஒரு முதல்வரின் உயிரை காப்பாற்றி, மத கலவரத்தைத் தடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் அப்துல் காலிக்.

அதற்காக அவர் எடுக்கும் முயற்சியே மீதமுள்ள படம். டைம் லூப் கதையை தமிழ் இரசிகர்களுக்கு புரியும்படி அழகாகச் சொல்லியிருக்கிறார் வெங்கட் பிரபு.

படத்தில் சிம்புவுக்கு தேவையில்லாத மாஸ் காட்சிகள் எதுவும் கிடையாது. சிம்புவின் நடிப்பு அருமை. அவருக்கும், வில்லன் எஸ்.ஜே. சூர்யாவுக்கும் இடையே நடக்கும் ஆடு, புலி ஆட்டம் இரசிகர்களை கட்டிப் போடுகிறது.

படம் துவங்கியதில் இருந்து முடியும் வரை விறுவிறுப்பாக செல்கிறது. அதிலும் இடைவேளை நேரத்தில் வரும் ட்விஸ்ட்டை யாருமே எதிர்பார்க்கவில்லை.

யுவனின் பி.ஜி.எம். படத்திற்கு பக்க பலம். மனிதர் வேற லெவலில் வேலை செய்திருக்கிறார். கல்யாணி ப்ரியதர்ஷன் சிம்புவுக்கு ஜோடி கிடையாது. படத்தில் வந்து செல்கிறார்.

சிம்பு தான் ஹீரோ என்றாலும் எஸ்.ஜே. சூர்யா அனைவரையும் கவர்கிறார்.

# ஹொலிவுட்டிலும் கால் பதிக்கும் நடிகை சமந்தா




நடிகை சமந்தா தமிழ், தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையாக வலம் வருபவர்.

இவர் படம் நடித்தாலே ஹிட் தான், செம வசூல் செய்யும் என்ற நம்பிக்கை தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்களிடம் உள்ளது.

தொடர்ந்து படங்கள் நடித்து வரும் சமந்தா தனது இடையில் ஆன் மீக சுற்றுப் பயணம் எல்லாம் மேற்கொண்டார்.

இப்போது மீண்டும் படங்கள் நடிக்க தொடங்கியுள்ளார், தற்போது காத்து வாக்குல இரண்டு காதல் படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் நடிகை சமந்தாவிற்கு ஹாலிவுட் படம் ஒன்றில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

**BAFTA** விருது வென்ற **Welsh** இயக்குனர் பிலிப் ஜான் இயக்க இருக்கும் புதிய படத்தில் நாயகியாக நடிகை சமந்தா நடிக்க இருக்கிறாராம்.

படத்திற்கு **Arrangements of Love** என்று பெயர் வைத்துள்ளார்களாம்.

இந்தத் தகவலை நடிகை சமந்தாவே தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட இரசிகர்கள் அவருக்கு வாழ்த்துக் கூறி வருகிறார்கள்.

# கமலின் உடல் நிலை குறித்து மருத்துவமனை அறிக்கை

கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நடிகர் கமலின் உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமலஹாசன் கொரோனாத் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு நவம்பர் 22 ஆம் திகதி சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் லேசான இருமல் இருந்ததாகவும், பரிசோதனை செய்ததில் கொவிட் தொற்று உறுதியானதால் மருத்துவமனையில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன் என்றும் கமல் தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் மருத்துமனை கமலின் உடல்நிலை குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதில், கொரோனா பாதிப்பால் சிகிச்சை பெற்றுவரும் நடிகர் கமலின் உடல்நிலை சீராக இருப்பதாகவும், குணமடைந்து வருகிறார் என்றும் தனியார் மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# மீண்டும் ஒரு என்ட்ரி.... பிக்பாஸ் வீட்டுக்குள் சென்ற பிரபல நடிகர்



நடிகர் கமலஹாசன் தொகுத்து வழங்கும் பிக்பாஸ் நிகழ்ச்சியின் 5 ஆவது சீசனில் பிரபல நடிகர் ஒருவர் வைல்டு கார்டு என்ட்ரியாக வீட்டிற்குள் சென்றிருக்கிறார்.

தமிழ் பிக்பாஸ் நிகழ்ச்சியின் 5 ஆவது சீசன் தற்போது 50 நாட்களை கடந்து விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. வழக்கமாக பிக்பாஸ் நிகழ்ச்சியில் வைல்டு கார்டு என்ட்ரியாக போட்டியாளர்கள் கலந்து கொள்வது வழக்கம். 40 அல்லது 50 நாட்கள் கடந்த பின்னரே வைல்டு கார்டு என்ட்ரியாக போட்டியாளர்கள் பிக்பாஸ் வீட்டுக்குள் அனுப்பப்படுவார்கள்.

தற்போது நடைபெற்று வரும் 5 ஆவது சீசனில் முதல் வைல்டு கார்டு போட்டியாளராக பிக்பாஸ் வீட்டுக்குள் சில தினங்களுக்கு முன்பு அமீர் என்பவர் சென்றார். தற்போது மற்றொரு என்ட்ரியாக பிரபல சின்னத்திரை நடிகரும், நடிகர் விஜயின் நெருங்கிய நண்பருமான சஞ்சீவ், பிக்பாஸ் வீட்டுக்குள் போட்டியாளராக சென்றிருக்கிறார்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அன்னமிட்ட கை
இயற்றியவர் : வாலி
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், எஸ்.ஜானகி




அழகுக்கு மறு பெயர் பெண்ணா
அல்லி மலருக்கு மறு பெயர் கண்ணா
தமிழுக்கு மறு பெயர் அமுதா
அதை தருகின்ற இதழ் தங்க சிமிழா
அழகுக்கு மறு பெயர் பெண்ணா
அல்லி மலருக்கு மறு பெயர் கண்ணா
தமிழுக்கு மறு பெயர் அமுதா
அதை தருகின்ற இதழ் தங்க சிமிழா

நூறு கோடி பாடல் நெஞ்சில்
ஊறுகின்ற வேளையிது
ஏடு போன்ற கன்னம் கண்டு
இதழ்களாலே எழுதுவது
நூறு கோடி பாடல் நெஞ்சில்
ஊறுகின்ற வேளையிது
ஏடுபோன்ற கன்னம் கண்டு
இதழ்களாலே எழுதுவது

அந்தி பொழுதில் தொடங்கும்
அன்பு கவிதை அரங்கம்
இளமைக்கு பொருள் சொல்ல வரவா
அந்த பொருளுக்கு மறுபெயர் உறவா
அழகுக்கு மறு பெயர் பெண்ணா
ஆ ஆ

அல்லி மலருக்கு மறு பெயர் கண்ணா
நாடி நரம்பில் கோடி மின்னல்
ஓடி பாய்ந்து மறைவதென்ன
கூந்தல் தொடங்கி பாதம் வரையில்
கைகள் கொண்டு அளப்பதென்ன
நாடி நரம்பில் கோடி மின்னல்
ஓடி பாய்ந்து மறைவதென்ன
கூந்தல் தொடங்கி பாதம் வரையில்
கைகள் கொண்டு அளப்பதென்ன

அது முதல் முதல் பாடம்
அடுத்தது என்ன நேரம்
எடுப்பதும் கொடுப்பதும் நடக்கும்
அதில் இருவருக்கும் சரி பங்கு இருக்கும்

அழகுக்கு மறு பெயர் பெண்ணா
அல்லி மலருக்கு மறு பெயர் கண்ணா
தமிழுக்கு மறு பெயர் அமுதா
அதை தருகின்ற இதழ் தங்க சிமிழா

ஆலிலை மேலே கண்ணனை போலே
நூலிடை மேலே ஆடலவோ
ஆடும் பொது கூடும் சுகத்தை
வார்த்தை கொண்டு கூறிடவோ
பெண்மை மலர்ந்தே வழங்கும்
தன்னை மறந்தே மயங்கும்
விழுந்த பின் தெளிவது தெளியும்
அது தெளிந்த பின் நடந்தது புரியும்
அழகுக்கு மறு பெயர் பெண்ணா

# அடக்குமுறைகள் வெடித்தெழ வைக்கும்

**“ஒரு இனத்தை வென்ற நாளை வெற்றிவிழாவாய்க் கொண்டாட முடியுமெனில் இறந்த தன் உறவுகளை நினைவுகூரும் உரிமை மறுக்கப்படுவது ஏன்?”**

ஒரு பந்திற்குள் காற்று அடிக்கப்படுகிறது. காற்று ஏற ஏற அந்தப் பந்து பெரிதாகிக் கொண்டே போகிறது.

பந்து முழுவதும் காற்று ஏற்றப்பட்டு விட்டது. ஆனாலும் காற்று ஏற்றுவதை நிறுத்தவில்லை. பந்து கல்லுப் போல் வைரமாகிறது. அப்போதும் காற்று ஏற்றுவதை நிறுத்தவில்லை.

இனி அந்தப் பந்தில் காற்றை சேமிக்க இடமில்லை என்ற நிலை வந்ததும் பந்து டமார் என வெடிக்கிறது.

இது வெறும் கதையல்ல. மனித வாழ்வியலுக்கும் பொருத்தக் கூடியதே இது.

ஆம், அடக்குமுறை எங்கு பிரயோகிக்கப்படுகிறதோ அங்கே வெடித்தெழுதல் நிகழ்ந்தே தீரும். அதையே உலக வரலாறுகள் எமக்குப் பாடமாய் தந்திருக்கின்றன.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பது நெடுங்காலமாய் நிலவி வருகின்றது. அது இன்று வரை தீர்ந்ததாய் இல்லை.

பெரும்பான்மை என்ற தோரணையில் சிறுபான்மையினரை பெரும்பான்மையினர் நசுக்கத் தொடங்கியதன் விளைவே இன முரண்பாட்டிற்கான மூலமாகும்.


அதன் விளைவு அறவழிப் போரில் தொடங்கி இளைஞரை ஆயுதம் ஏந்த வைத்து விட்டது.

ஆயுதப் போராட்டம் 2009 மௌனிக்கப்பட்டதும் தமிழினம் பட்டபாடுகள் சொல்லி மாளாது.

அந்தளவிற்கு தமிழினம் பட்டபாடுகள் ஏராளம்.

ஒரு இனத்தை வென்று விட்டோம் என மார்த் தட்டிக் கொள்வது ஒன்றும் பிரச்சினையான விடயமல்ல.

ஆனால் அந்த இனத்தை வென்ற நாளை வெற்றி நாளாகக் கொண்டாடும் அளவில் உள்ளது எனின் பெரும்பான்மையினரின் மனநிலை எப்பேர்ப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.



பெரும்பான்மை இந்த நாட்டை ஆட்சி செய்கிறது. இங்கு நாங்கள் வைத்தது தான் சட்டம் என்பதற்காய் தோற்றுப் போன இனத்தைக் காயப்படுத்தும் செயல்களை செய்து கொண்டிருப்பது ஏற்கக்கூடிய விடயமல்ல

இலங்கை அரசினால் பயங்கரவாதம் என முத்திரை குத்தப்பட்டாலும் அவர்கள் தமிழினத்தின் விடிவுக்காக-விடுதலைக்காக போரிட்டவர்களே என்பது மறுக்க முடியாத உண்மை.

அந்தப் போரில் மாண்டு போனவர்களை நினைவு கூரக்கூடாது என தடை போட்டு அடக்குமுறைகளைப் பிரயோகிப்பது மனிதம் அல்ல.

தமிழினத்தின் உரிமை மீட்புக்காக பல்லாயிரக் கணக்கான இளைஞர், யுவதிகள் தம் உயிரை ஆகுதியாக்கியிருக்கின்றனர்.

அவர்களின் தியாகம் போற்றப்பட வேண்டியது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாய், தந்தை, அக்காள், தமயன், தங்கை சுற்றம் சூழ என உறவுகள் உண்டு. அந்த உறவுகளால் மாண்டுபோன தன் பிள்ளையை நினைவுகூருவதற்கு உரிமை மறுக்கப்படுகிறது ஏன்?

2009 இற்குப் பின் மாவீரர் நினைவேந்தல் மறுக்கப்பட்டாலும் நல்லாட்சி காலத்தில் மாவீரரை நினைவேந்துவதற்கு தடையேதும் விதிக்கப்படவில்லை.

அந்தக் காலப் பகுதியில் உறவுகள் தங்கள் பிள்ளைகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அன்று பயங்கரவாதத்தை மீளுருவாக்கம் செய்தவர்கள் என எவரும் கைது செய்யப்படவில்லை. பயங்கரவாத மீளுருவாக்கமும் நடைபெறவும் இல்லை.

ஆட்சியாளர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் கேட்பதெல்லாம் இறந்த எம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையை மட்டுமே. பயங்கரவாதத்தை உருவாக்கும் செயற்பாடுகளுக்கல்ல.

ஆனால் இவை எவற்றையும் கருத்தில் எடுக்காது படைக்குவிப்பு, தடையுத்தரவு என தமிழ் மக்களை உள நெருக்கீட்டிற்குள்ளாக்குவது தான் ஜனநாயகமா?

ஒரு இனத்தை வெற்றி கொண்ட நாளை பாரிய விழாவாக இராணுவ அணி வகுப்புக்களுடன் கொண்டாட முடியும் எனின் தமிழினத்துக்காக உயிர் நீர்த்த உறவுகளை ஏன் நினைவு கூர முடியாது.

தமிழ் இனத்தை சந்தேகக் கண் கொண்டு பயங்கரவாதிகளாகப் பார்க்கும் பார்வையை பேரினவாதம் நிறுத்த வேண்டும்.


தமிழினத்திற்கும் இந்த நாட்டில் உரித்துண்டு என்ற உண்மையை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழினத்தின் பிரச்சினை என்ன என்பதை புரிந்து கொண்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தர முன்வர வேண்டும்.

இந்த விடயங்களை புரிந்துகொள்ளாதவரை இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பது எட்டாக்கனியே.

-அபிமன்யு-

# பைசா நகர் சாய்ந்த கோபுரம் (இத்தாலி)



அதன்படி கோபுரத்தைச் சுற்றிலும் 120 துளைகள் ஒன்றை ஒன்று தொடுமளவு மிக நெருக்கமாகப் போடப்பட்டு அவைகளின் வழியே இளகிய தன்மை கொண்ட மண் வெளியேற்றப்பட்டது. உள் சுற்றில் இணையாக மேலும் சில துளைகள் போடப்பட்டு கெட்டித் தன்மையுள்ள மண் கொட்டப்பட்டது.

அதன் ஈரப்பதத்துக்காக தேவையான அளவு நீர் ஊற்றப்பட்டது. இந்த முயற்சிக்குப் பின் கோபுரத்தின் சாய்வு கோணம் 5.5 டிகிரியிலிருந்து 3.9 டிகிரியாக குறைந்தது.

கோபுரத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டபின் பார்வையாளர்களுக்காக 2001 ஆம் ஆண்டு மீண்டும் திறக்கப்பட்டது.

உலகமெங்கும் பைசா நகர் கோபுரம் போல சாய்ந்த கோபுரங்கள் நிறையவே உள்ளன. இத்தாலியிலேயே சான் மிக்கேல் தேவாலயம் மற்றும் சான் நியாட்டா கோபுரம் ஆகியன சாய்ந்த நிலையில்தான் உள்ளன.

கனடா நாட்டில் மாண்ட்ரில் நகரிலுள்ள 'பிக் ஓ' எனப்படும் ஒலிம்பிக் ஸ்டேடியம், கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள ஜேர்மனி தேசத்தின் சுர்ஹுஸன் தேவாலயம், அபுதாபியிலுள்ள கேபிடல் கேட் கோபுரம் ஆகியன மிக முக்கியமான சாய்ந்த கோபுரங்கள் ஆகும்.

எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு பைசா கோபுரம் இன்று உலகப் புகழுடன் அதிசயங்கள் பட்டியலில் இருப்பதற்கு அதன் தொன்மையும் வனப்புமே காரணமாக இருக்கக்கூடும்.

# தாஜ்மகால்

இந்தியாவின் வனப்புமிக்க அடையாளமாக கிட்டத்தட்ட 350 வருடங்களாக ஜொலித்துக் கொண்டு இருப்பது, ஆக்ராவின் யமுனை ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் தாஜ்மகால்.

உறைபனித்துளி ஒன்று பெருகித் திகழ்வது போன்று தோற்றமளிக்கும் அந்த பளிங்கு மாளிகை அமரத்துவமான காதலின் அழிக்க முடியாத சின்னமும் கூட.

முகலாய வம்சத்தின் மகத்தான கலாரசிகன் ஷாஜகான் தனது இதயத்தில் ததும்பி வழியும் காதல் அத்தனையும் கொட்டி செதுக்கிய அற்புதம் தான் தாஜ்மகால்.

அக்பரின் பேரனாகிய ஷாஜகானின் இயற்பெயர் குர்ரம் ஷெஹாப் உத்தின் முஹம்மது என்பதாகும்.

அவரது 15 ஆவது வயதில் அர்ஜுமண்ட் பானு பேஹம் என்கிற 14 வயது பேரழகியைச் சந்திக்கிறார். இருவருக்கும் இடையில் காதல் அரும்புகிறது. ஆனால் தர்பார் எனப்படும் அரசவைச் சான்றோர்கள், ஜோதிடக்காரர்கள் ஐந்து வருடம் திருமணத்துக்காக அவர்கள் காத்திருக்க வேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கிறார்கள்.

அரசவையின் முடிவுக்கு ஷாஜகானின் தந்தை ஜஹாங்கீர் கட்டுப்பட்டவர் என்பதால் ஷாஜகான் காத்திருக்க வேண்டியதாயிற்று. (தொடரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2458

## மதன்

ஏன்டா ஏழு கழுதை வயசு ஆகுது இப்ப போய் ரிமோட் கார், எல்லாம் வாங்கி வச்சி விளையாடுற....





சின்ன வயசுல எவன்டா வாங்கி கொடுத்தீங்க.. அதான் வேலைக்கு போய் நானே வாங்கிக்கிட்டேன்..

## அத்வைதா



இனி உனக்கு வீட்டுக்குள்ளே இடம் கிடையாது

## சுவனியா



இதுல தினமும் ஒரு மாத்திரை சாப்பிடுங்க நல்லாத் தூக்கம் வரும்
5 மாத்திரை சாப்பிட்டா டாக்டர் சிம்பிள்...தூக்க ஆள் வரும்

## தர்சிகா




மருந்து மாத்திரை எதுவா இருந்தாலும் இதுல கலந்து குடுத்தாத்தான் குடிப்போம்




## தினேஷ்

என்ன பாட்டி இன்னைக்கும் lunch க்கு chicken பிரியாணி தானா?




காய்கறி விக்கிற விலைக்கு நம்மளப் போல ஏழைக்கெல்லாம் இதான்பா இனி சாப்பாடு

## சுதர்சினி

அத்தை அலப்பறைகள்

10 வயதில்: நீ காலேஜ் படிச்சு முடி என் பொண்ணு உனக்குத்தான்



25 வயதில்: நல்ல மாப்பிள்ளை இருந்தா சொல்லுடா பாப்பாவ கட்டி வச்சிருவோம்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

267

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்களுக்கான பதில்கள்

**எனது வயது-28. இரண்டு விதைகளும் விதைப் பையினுள் இருக்கின்றது. ஆனால் ஒன்று உயரமானதாகவும் மற்றையது பதிவாகவும் உள்ளது. இது ஒரு நோயா? இதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?**

உயர வித்தியாசம் என்பது இயற்கையானது. இது நோயின் அறிகுறி அல்ல. உங்களுடைய விதைப் பையில் ஒரு விதை மாத்திரமே இருந்து மற்றையதை அடையாளப் படுத்த முடியாமல் இருந்தால் உடனடியாக நீங்கள் வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும். விதையானது விதைப் பையினுள் இறங்காது வயிற்றினுள்ளேயே காணப்படின் பல பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் உங்கள் விதையானது விதைப் பையினுள் இறங்கியிருப்பதால் இது பற்றிக் கவலை கொள்ளத் தேவையில்லை.

**எனது நிறை அதிகம் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். உணவைக் குறைத்து சாப்பிடாமல் இருந்தால் தலை சுற்றுகிறது. உணவைக் கடுமையா கக் குறைத்தால் உடல் பலவீனப் பட்டு விடும் என்று பயமாக இருக்கிறது. உடற் களைப்பை போக்குவதற்கு எந்த வகையான சத்துமா வகைகளைச் சாப்பிடலாம். உப்புச் சோடா குடித்தால் நிறை அதிகரிக்குமா? அதிகரித்த நிறையுடன் பலர் நீண்டகாலம் வாழ்கிறார்களே? உடல் மெலிந்து விட்டால் நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்து ஏற்படாதா?**

உங்கள் களைப்புக்கு முக்கிய காரணியாக இருப்பது உங்களது அதிகரித்த உடல் நிறையே. உங்கள் அதிகரித்த உடல் நிறையைச் சமாளிக்கும் வல்லமை உங்கள் உடல் உறுப்புகளுக்குப் போதாமல் இருக்கும் பொழுது களைப்பு ஏற்படுகிறது.

உங்கள் களைப்புக்கு வேறு ஏதாவது காரணிகளும் இருக்கிறதா? என்று உங்கள் மருத்துவர் உங்களைச் சோதித்துப் பார்த்திருப்பார். உணவைக் கடுமையாகக் குறைத்து பட்டினி கிடந்து தான் உடல் நிறையைக் குறைக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

அவ் வாறு செய்தால் உங்களுக்கு மட்டுமல்ல யாருக்கும் தலைச் சுற்றும் களைப்பும் ஏற்படுவதுடன் உடலும் பலவீனமாகும். உடல் நிறையைக் குறைப்பதற்குச் சாப்பாட்டு வகையிலேயே மாற்றம் செய்ய வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.



நீங்கள் நிறையைக் குறைப்பதற்கு மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்த்து நல்ல ஊட்டச் சத்துள்ள, புரதம் நிறைந்த கனியுப்புகள் நிறைந்த, விற்றமின்கள் நிறைந்த உணவுகளைப் போதியளவில் உண்ண முடியும். நீங்கள் போதியளவில் உண்ணக் கூடிய உணவுகளாவன பால், மரக்கறி வகைகள், கௌப்பி, முட்டை, மீன், இறால், பயறு, பருப்பு வகைகள், பழவகைகள், கோழி இறைச்சி, சுறா, சோயா, அவரை, இலை வகைகள், கொண்டல் கடலை போன்றவையாகும். இவற்றைப் போதியளவில் உண்டு நிறை குறைந்துவரும் போது உங்கள் உடல் பலவீனப்பட மாட்டாது.

நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்தும் ஏற்படாது. மேலதிக சத்துமாக்களும் தேவைப்படாது. சோடா வகைகள் உடலுக்குப் பாதுகாப்பானது அல்ல. அவற்றைத் தவிர்ப்பது நல்லது. அதிகரித்த நிறையுள்ளவர்கள் அது எந்தக் காரணத்திற்காகவும் ஏற்பட்டிருந்தாலும் பரம்பரை காரணமாக ஏற்பட்டிருந்தாலும் கூட நிறையைக் குறைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

நிறையைக் குறைத்துக் கொள்வதன் மூலம் வாழ்நாளை அதிகரித்துக் கொள்ளலாம் என்று ஆராய்ச்சிகள் சொல்கின்றன. நிறையைக் குறைப்பது கடினமல்ல, முயற்சி எடுங்கள்.

**கொலஸ்ரோல் அதிகமாக உள்ளதால் பசுப்பால் குடிக்க பயமாகவுள்ளது. பருகலாமா?**

பசுப்பால் ஊட்டச்சத்துள்ள உணவாகும். எல்லா வகையான போசணையையும் உள்ளடக்கியுள்ளது. ரின், பைக்கற்றில் அடைக்கப்பட்டு இரசாயனப் பொருட்கள் சேர்ந்த மாவகைகளிலும் பார்க்க பால் இயற்கையான, பாதுகாப்பான ஒரு பானமாகும்.

எமது உணவின் கலோரிப் பெறுமான அடிப்படையில் 30% கொழுப்பு உணவாக இருக்க வேண்டும். மற்றைய கொழுப்பு உணவு வகைகளை தவிர்த்து பால் குடிப்பதன் மூலம் உடலில் சேரும் கொழுப்பு அதிக பாதிப்பை ஏற்படுத்தாது.

உதாரணம் 100ml பாலில் 4.1g கொழுப்பு இருக்கின்றது. 100g தேங்காய்ப்பூவில் 28.2g கொழுப்பு இருக்கின்றது. 100g தேங்காய்ப் பூவை தவிர்த்தால் 700ml பாலை எவ்வித பயமுமின்றி குடிக்கலாம்.

வீட்டில் உள்ள இயற்கையான பசுப்பாலை குறைந்த விலையில் விற்று விட்டு nonfat பாலை கூடிய விலை கொடுத்து வாங்குவது புத்திசாலித்தனமாகாது. எனவே உங்கள் உணவில் மற்றைய கொழுப்பை குறைத்து பசுப்பாலை பாதுகாப்பாக சேர்க்கலாம்.

**அடிக்கடி தடிமனால் பாதிக்கப்படுகிறேன். தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் என்பவற்றால் அவஸ்தைப்படுகிறேன். அன்ரிபயோட்டிக் பாவித்தும் குணமடைவதில்லை. இதை எவ்வாறு தடுக்கலாம்?**

இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப்பாதையில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Allergic Rhinitis என்பர். இது கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல. கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய்களுக்கே அன்ரிபயோட்டிக் (Antibiotics) தேவைப்படும்.

தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்த மணி என்பன சுவாசப் பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் Allergic Rhinitis ஏற்படுகின்றது. இதனால் அரிப்பு, வீக்கம், மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல், மூக்கடைப்பு என்பன ஏற்படுகின்றன.

சில பொருட்கள் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். இவ்வாறு ஒவ்வாமையை ஏற்படுத் தும் அவ்வாறான ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருட்களைத் தவிர்த்தால் அறிகுறிகள் தானாகவே குறைந்து விடும்.

அவ்வாறு குறையாவிட்டால் மருந்துக் குளிகைகளையோ மூக்கினுள் விசிறும் மருந்து வகைகளையோ பாவிக்க வேண்டி ஏற்படலாம். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் மருத்துவ ஆலோசனையின் பின்னரே மருந்துகளைப் பாவிக்க வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்